# தென்மொழி

## பணப்பதுக்கல் பறிமுதல் செய்க !

அடிக்கின்ற கொள்ளையரை — பணம் பதுக்கும்
முதலைகளை அழித்தி டாமல்,
துடிக்கின்ற ஏழைகளின் துயரத்தைக்
கண்ணீரைத் துடைப்போம் என்னும்
நடிக்கின்ற நடிப்பெதற்கு ? நயமான
பேச்செதற்கு ? நடுக்கு எதற்கு ?
பிடிக்கின்ற பிடியினிலே பணப்பதுக்கல்
பறித்தொருமை பேணு வீரே !

சுவடி : ங; ஓலை : எ. மடங்கல் (ஆவணி) கககஅ.

தனித்தமிழ்
இலக்கியத்
திங்களிதழ்

உரு 0 } காசு
50

# தென்மொழி

இலக்கிய இதழ்


'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே


**சுவடி - 5 :: ஓலை - 7**

மடங்கல் (ஆவணி) தி. பி. ககககஅ (1967–ஆக.ஃ.ச்டு)

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்:– தங்கப்பா

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1


# மீண்டும் மொழிக்குழப்பம்!

இந்திய நாட்டுக்குத் தன்னுரிமை கிடைத்தபின், இந்திய அரசு செய்த பெரிய தவறுகளுள், மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைத்ததும், ஒருமைப்பாடு வேண்டி இந்தியைத் தேசிய மொழியாகத் தேர்ந்தெடுத்ததும் கண்டிக்கத்தக்க – மிகப் பெரிய தவறுகளாகும். இவற்றின் அடிப்படையில் நடுவணரசு அன்றிலிருந்து இன்றுவரை செய்துவரும் நடைமுறைகளால், இவ்வரசினர் எதிர்நோக்கும் இந்திய ஒருமைப்பாடு பெரிதும் சீர்குலைந்து வருகின்றதே அன்றி, ஒரு சிறிதும் வளர்ந்ததாகத் தெரிவில்லை. மாநிலங்களின் எல்லைகளை வகுக்கும் முயற்சியில் ஏற்படுத்திய கசப்புணர்ச்சிகள் மறைந்துபோகா முன்னமேயே, மொழித்துறையில் எல்லா மக்களுக்கும் ஒரு பெருத்த வெறுப்புணர்ச்சி ஏற்படும்படி நடுவணரசு நடந்துகொண்டது. பிற

மேடு,தேவிகுளம் போராட்டங்களும்,பஞ்சாபு,அரியானு அமைப்புகளும் கோவா எல்லைச் சிக்கல்களும் எவ்வளவு தொல்லைகளை ஏற்படுத்தினவோ, அவ்வளவுக்கும் மிகுதியான தொல்லைகளை இந்தித் திணிப்பு ஏற்படுத்தி வருகின்றது. 'இந்தியை இந்நாட்டின தேசிய மொழியாகச் செய்யும் முயற்சியில், இந்தியாவையே இழப்பதானாலும்கூட, நாங்கள் வருந்தப்போவதில்லை' என்று இந்தி வெறியர்கள் வெளிப்படையாகக் கூறத் தொடங்கிவிட்டனர். வடநாட்டு இந்தி வெறியர் ஒருவர், 'இந்தியைத் தேசிய மொழியாக்கும் முயற்சி சரிவர நடைபெறவில்லையானல், இந்தியாவே தீப்பிடித்து எரியும்' என்றுகூட அச்சுறுத்தியிருக்கின்ருர். 'இந்தியக் காப்புச் சட்டம்' என்ற நாட்டுக்காவல் சட்டம் அவர் அண்மையில்கூட நெருங்கமுடியவில்லை. இத்தகைய இந்தி வெறியர்களின் திரண்ட முயற்சிதான், நூற்றுக்கணக்கான தமிழர்களைப் பலிகொண்டது; இனியும் கொள்ளவிருக்கின்றது. தமிழ் நாட்டில் இந்தி நுழைப்பு வேலை கடந்த 50 ஆண்டுகளாக நடைபெற்று வருவதும், அதை எதிர்த்துப் பெரும்பெருந் தலைவர்கள் எனப்படுவாரெல்லாரும் முட்டிப் பார்த்து மண்டைக்கட்டுப் போட்டுக் கொண்டதும், அவ்வேலை தமிழ் நாட்டில் எவ்வளவு ஆழமாக வேரூன்றிவிட்டது என்பதையே காட்டும். இருந்துங்கூட தமிழர்களுக்கு இன்னும் சூடும் வரவில்லை; சுரணையும் ஏறவில்லை.

தமிழகம் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகப் போராடி வரும் இன நலத்திற்கும், மொழி நலத்திற்கும் இன்னும் விடிவு ஏற்படவில்லை என்றே சொல்லுதல் வேண்டும். இவ்வெல்லாப் போராட்டங்களுக்கெல்லாம் மூடி வைத்தாற்போல் இரண்டாண்டுகளுக்கு முன் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டக் கொந்தளிப்புகள் தமிழர் இன, மொழி வரலாற்றில் குறிப்பிடக்கூடிய ஒரு போராட்டமாகும். ஆனல் அப் போராட்டத்தின் விளைவைத் தமிழகம் முழுவதுமாக அடையும் முன், மீண்டும் அத்தகைய ஒரு போராட்டத்திற்கு வித்தூன்றிக் கொண்டுள்ளனர் வடவர். அதற்குச் சரியான மூட்டங் கொடுத்துக் கொண்டுள்ளனர் இங்குள்ள ஆரியப் பார்ப்பனர்கள். அதன் விளைவே அண்மையில் நடுவணரசுக் கல்வியமைச்சர் திரு. திரிகுணசென் வெளிப்படுத்திய திருத்தப்பெற்ற மொழிக் கொள்ளகையாகும். அக் கொள்கைப்படி ஒன்று அவ்வம் மாநில மொழிகளே பல்கலைக் கழக அளவின் பயிற்சி மொழியாக அமையும். இரண்டு நாட்டின் தொடர்பு மொழியாக இந்தி ஒன்றுதான் முடிவாக ஏற்றுக்கொள்ளப்படும்;

எனவே இந்தியை இந்தி பேசாத மாநிலங்களும் கற்றுக்கொள்ள எல்லாவகை முயற்சிகளும் செய்யப்படும். மூன்று, ஆங்கிலம் உலக மொழியாக இருந்து அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணையாக விருப்பதால், அது மூன்றுவது மொழியாகக் கற்றுக் கொடுக்கப்படுதல் வேண்டும். பல புரட்டல், உருட்டல் செய்து முடிவில் தான் கொண்ட பழைய கொள்கையே புதுக் கொள்கையாக உருவாக்கிக் காட்டியுள்ளது நடுவணரசு.

இம் மூன்று கொள்கைகளில் முதல் கொள்கையையும், மூன்றுவது கொள்கையையும் இந்தி வெறியர்கள் எதிர்க்கின்றனர். அரசு இந்தித் திணிப்பைப் பொறுத்தமட்டில், இந்தி எதிர்ப்பாளர்க்கு இத்துணையளவு பரிந்துவரக்கூடாது என்பது அவர்கள் மனக்கொதிப்பு. இரண்டாவது கொள்கையோ இந்திபேசாத மாநிலங்களுக்கு எரிச்சலை மூட்டியிருக்கின்றது. ஏனென்றால் எந்த நிலையிலும் இந்தியை ஒரு பொது மொழியாகச் செய்யக்கூடாது என்பதும், அப்படியே செய்தாலும் அதைக் கட்டாயமாகத் திணிக்காமல் அவரவர் விருப்பத்திற்கே விட்டுவிடவேண்டுமென்பதும் இந்தி பேசாத மக்களின் கோரிக்கை. இந்த இருதரப்புக் கொள்கைகளையும் வைத்துக்கொண்டு நடுவணரசு பூனைகளுக்கு அப்பம் பிரித்த வகையில், குரங்காக இருந்து செயல்பட்டு வருகின்றது.

மேலும் மூன்றுவது மொழியாகிய ஆங்கிலத்தைச்சிறிது சிறிதாக நீக்கிவிட்டு, அந்த இடத்தில் இந்தியையே நிரவலாக ஏற்பாடு செய்துவிடுதல் என்னும் வடநாட்டு இந்தி வெறியரின் கொள்கை முழு முட்டாள்தனமும் பேதைமையும் வாய்ந்த கொள்கையாகும். அறிவு தரும் ஒரு மொழியைப் பிறமொழி என்று இகழ்ந்து தள்ளிவிட்டு, அறிவற்ற வறட்டு மொழியைத் தன்மொழி என்று தலைமீது வைத்துக் கொண்டு கூத்தாடுவதென்பது, உண்மையான அறிவும் ஆகாது; நாட்டுப்பற்றும் ஆகாது. பார்ப்பனர்களோ ஆங்கிலத்தையும் இந்தியையும் பொறுத்தமட்டில் இரண்டு ஆட்டுக்குட்டிகளுக் கிடையில் வந்து புகுந்த ஓநாய்போல, ஆங்கிலத்தையும் பாராட்டிப் பயில்கின்றனர். இந்தியையும் உவந்து கற்கின்றனர். நமக்கோ ஆங்கிலம் என்பது தமிழர்களின் அடிமை விலங்கை ஒடித்த அறிவு மொழி! பார்ப்பனர்களின் மனுநூற் பிடிப்பிலிருந்து விடுவித்த கல்வி மொழி! சூத்திரன் என்ற இழிவுப் பட்டத்தை ஒழிக்க வந்த உரிமை மொழி! உலக வரலாறு கற்பித்த வாழ்வு மொழி! இதைத் துறந்துவிடின்,

மீண்டும் தமிழகமும், தமிழரும் ஆரியப் பிடிக்குள் சிக்கி மாழ்கி மாண்டொழிவர் என்பது திண்ணம். எனவே தமிழகத்துள்ளவர் – தமிழர் தமிழையும் ஆங்கிலத்தையும் தங்கள் இரண்டு கண்களெனப் போற்றிக் கொளல் வேண்டும். ஆங்கிலம் அறிவு மொழி; அருந்தமிழ் மெய்யறிவு மொழி! இவை இரண்டையும் விடுத்த மூன்றும் மொழி நமக்குத் தேவையில்லை. இது நிற்க.

இதுவரையில் இந்தியைப் பொறுத்தமட்டில் அரசின் மொழிக் கொள்கை 9, 10, 11-ஆம் வகுப்புகளில், தாய்மொழி (அஃதாவது மாநில மொழி), ஆங்கிலம் இரண்டுடன், வேறு ஏதாவதோர் இந்திய மொழி கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் என்று இருந்து வந்தது. இதில் ஏ தா வ தோ ர் இந்திய மொழி என்பதை இந்தி மொழி என்று கருதும்படியும், அது தேசியமொழியாகையால் அதற்கே ஊக்கம் கொடுக்கும்படியும் மாநில அரசுகளை நடுவணரசு வற்புறுத்தி வந்ததுடன், அவ்வாறு இந்தியைப் பயிற்றினால், அதற்காகும் முழுச் செலவையும் தானே ஒப்புக்கொண்டும் வந்தது. இஃது ஓரினத்தை அடிமைப்படுத்தும் பெரியதொரு சூழ்ச்சி என்பதை உணராமல், ஒருமைப்பாடு என்ற பெயரால் நம்(!) பக்தவத்சலம் போன்ற அடிமை அநுமன்களும், சுப்பிரமணியம் போன்ற வீடணர்களும், அளகேசப் பிரகலாதன்களும், காமராசுகளும் நம்பித் தலை தாழ்த்தித் தம்பிரான்மார்களாகச் செயல்பட்டு வந்தனர். ஆரியப் பார்ப்பனர்களோ தில்லியின் கொல்லைப்புறத்திற்குச் சென்று, 'ஏதாவதோர் இந்திய மொழி' என்பதில் இந்தியை மட்டும் சேர்த்துக் கொள்ளவும், அதற்குமட்டும் சலுகை காட்டவும் கூடாது; சமசுக்கிருதத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள்' என்று வேண்டி, அப்படியே நடைமுறைக்கும் கொண்டு வரச்செய்துவிட்டனர். அதன்பின், 'வேறு ஏதாவதோர் இந்திய மொழி' என்னும் சொல் தொடரை, "இந்தி, அல்லது சமசுக்கிருதம் போன்ற ஏதாவதோர் இந்திய மொழி" என்று மாற்றிச் செயல்பட்டு வந்தனர். இதற்கு ஏந்தாகச் சலுகைகளும் விரிவாக்கப்பட்டன. இக்கொடுமையைத் தட்டிக்கேட்ட ஒரு சிலரிடம் 'சமசுக்கிருதம் இந்தியாவில் உள்ள மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி; பழைய மொழி' என்று முத்தையன் போன்றவர்களின் வாய்வழி விளக்கம் கூறப்பட்டது. இத்தனைக்கும் விளைநிலமாக இன்னொரு சூழ்ச்சியையும் இவ்வாரியப் பார்ப்பனர் கைக்கொண்டனர். அதுதான் பள்ளிகளில் இந்தி, சமசுக்கிருத ஆசிரியர்களை மட்டும் வைத்துக்

கொள்வது. மாணவர்களில் எவராவது 'வேருேர் இந்திய மொழி' என்பதற்காக, வங்காளியையோ, குசராத்தியையோ படிக்கவேண்டும் என்று விரும்பிஞல் 'அவற்றிற்கெல்லாம் ஆசிரியர்கள் இல்லை' என்று கூறிவிடுவது.

இந்தியைப் பரவலாக வேரூன்றும்படி செய்துவிட்டால், இந்தியா எப்பொழுதும் சிதைவுருது; அதஞல் வடவர்களுக்கே என்றும் ஊதியம் என்பது வடநாட்டு இந்தி வெறியர்களின் கருத்து. இதே காரணம் பற்றித்தான் நாமும் இந்தியை எதிர்க்கின்ருேம் என்பதும் வடவர்க்குத் தெரியும். வெளிநாடுகளில் இந்தியா என்பதே வட இந்தியாதான் என்றும், இந்திய மொழி என்ருலே இந்திதான் என்றும் கருதும் படியே வடவர்கள் இதுவரை பேச்சில், எழுத்தில், செயலில் காட்டி வந்துள்ளனர். இந்தப் புரட்டுப் பேச்சில் ஆரியப் பார்ப்பனர்களும் கலந்துகொண்டதுடன், வடநாட்டினரைவிட ஒருபடி மேலேறி, அப்படிப்பட்ட இந்தியும், பிற இந்தியமொழிகளும் சமசுக்கிருதம் என்ற மொழியிலிருந்தே தோன்றியவை என்றும், அவைதவிர உருசிய, செருமானிய, இலத்தீன் மொழிகள் போன்ற பிற உலகமொழிகளுக்கெல்லாம் கூட சமசுக்கிருத மொழி சொற்களைக் கடன் வழங்கியுள்ளதென்றும் புளுகி வந்துள்ளனர். இதஞல் அவர்கள் இரட்டை ஊதியம் பெற்றும் வந்தனர். ஆஞல் எந்தக் கொள்கையால் அவர்கள் இந்திக்கும், சமசுக்கிருதத்திற்கும் வலிவேற்றி வந்தனரோ - எந்தக் கொள்கையால் இந்தியா ஒருமைப்பாடு கொண்டுள்ளதாகப் பறைசாற்றி வந்தனரோ அந்தக் கொள்கையாலேயே அவர்களின் மொழி வீழ்த்தப்பட உள்ளதென்றும், அவர்கள் பேசிவரும் ஒருமைப்பாடு சுக்கல் நூருகச் சிதறியடிக்கப்படப் போகின்றதென்பதையும் அவர்கள் அறியும் காலம் வந்துவிட்டது. அதற்கு முதல் முயற்சியாக நம் தமிழக அரசு ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது பாராட்டத்தக்கது.

'ஏதாவதோர் இந்தியமொழி கற்க வேண்டும்' என்றிருப்பதை, 'விரும்பிஞல் அதற்கு மாருகத் தமிழ்மொழியையே சிறப்பு மொழியாகவும் படிக்கலாம்' என்று ஓர் ஆணையைத் தி.மு.க அரசு எல்லாப்பள்ளிகளுக்கும் அனுப்பியுள்ளது. இந்த ஆணை வந்தவுடன் தமிழகத்தில் ஏற்பட்ட பரபரப்புக்கும் அச்சுறுத்தலுக்கும், எச்சரிக்கைகளுக்கும் அளவில்லை. இந்தியாசிரியர்கள் திருச்சியில் மாநாடு கூட்டி இவ்வாணையைத் திரும்பப்பெற வேண்டும் என்று முழங்கினர். ஆரியக் காவலர் திரு. இராசாசி அறிக்கைமேல் அறிக்கை விட்டார். இந்திப் பரப்புத்

தலைவரான வீடணத்திரு. சி. சுப்பிரமணியன் இவ்வேற்பாடு நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைப்பதாகும் என்று எச்சரிக்கையும், இதற்கு உடனடியாக நடுவணரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அச்சுறுத்தலும் விடுத்தார். திருச்சி இந்திப் பரப்பு மன்றச் செயலாளர் திரு. வேங்கடாச்சாரி ஒரு நீண்ட அறிக்கை விடுத்தார். தினமணிப் பார்ப்பனர்களும் சுதேசமித்திரப் பார்ப்பனர்களும் ஆசிரியவுரைகளை ஒரு முழ நீளம் எழுதிக் கண்டித்தனர். அண்ணாத்துரையின் பேச்சுக்கு ஒரு பத்தியும், காமராசரின் பேச்சுக்கு அரைப் பத்தியும், பெரியாரின் பேச்சுக்குக் கால் பத்தியும் கூட ஒதுக்காத அவ்வாரியப் பார்ப்பனத் தாளிகைகள், இந்தக்'கொள்ளைபோகிற' செய்திக்குப் பக்கம் பக்கமாக மதிப்புக் கொடுத்துப் பரபரப்புடன் வெளியிட்டன. 'இதனால் 5000 இந்தியாசிரியர்கள் வேலையிழப்பர்' என்றும், அரசினரின் மும்மொழித் திட்டம் தோல்வியுறும் என்றும், மாணவர்களின் மூளைப் பயிற்சி கெடும் என்றும், நாட்டின் எதிர்காலத் தேவைகளும் மாணவர்களின் எதிர்கால நலனும் ஒழுங்கே கேடுறும் என்றும் பலவாறுக அளவ கதைத்துத் தள்ளின. மாணவர்களின் எதிர்கால நலனும், நாட்டின் எதிர்காலத் தேவையும் அவர்கள் இந்தி படிப்பதாலும் சமசுக்கிருதம் படிப்பதாலும் மட்டும்தான் நிறைவு செய்யப்படுகின்றன என்றால், நாம் இவற்றை விட்டு விட்டு உருசியம் படிக்கலாமே! ஏனென்றால் அங்குத்தானே நாட்டு நலனும், மக்கள் தேவையும் முற்றிலும் நிறைவு செய்யப்படுகின்றன.

இந்தியையும் சமசுக்கிருதத்தையும், வடவரும் பார்ப்பனரும் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்து செல்லுமாறும் வளருமாறும் ஒன்றுபடுத்தி விட்டிருக்கின்றனர். இந்தி படிப்பவர்க்கு ஊதியங்களும், சலுகைகளும் உடனுக்குடன் கிடைக்கின்றன. சமசுக்கிருதம் படிப்பவர்க்கும் அவை உடனே கிடைக்கின்றன. எனவே இவ்விரு மொழியாசிரியர்களாகிய 5000 பேர்களின் நன்மைக்காக, நாலரைக் கோடித் தமிழர்களைக் கொண்ட இத்தமிழகமே அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டும் என்பதுதான் இவர்களின் கூக்குரலுக்கு உட்பொருளோ?

இந்தியும் சமசுக்கிருதமும் இத்தமிழகத்தை இன்றும் அன்றும் தொடங்கிப் படுத்தி வரும் பாடு சொல்லுந்தரமன்று. மொழியறிவு அற்ற மூங்கையர்களும், பிழைப்பற்ற பேதைகளும், தமிழ் இனப் பகைவர்களும் வேண்டுமானால் இவ்விரு மொழிகளுக்கும் கால்தூக்கிகளாக இருந்து காலங் கடத்தலாம். உண்மைத் தமிழர்கள் அப்படி இருக்க

வேண்டிய தேவையில்லை. தமிழர்களில் போலியர் உள்ளனர் என்பதனுல் தமிழர்கள் எல்லாரும் போலியர் அல்லர். தமிழர்களில் கோழையர் உள்ளனர் என்பதால் தமிழர்கள் எல்லாரும் கோழையர் அல்லர்; அல்லது தமிழர்களில் இனப் பகைவர்களும், மடியேந்திகளும், வாங்கித் தின்னிகளும் இருப்பதனுல் தமிழர்கள் எல்லாருமே இனத்துக்குப் பகைவர்களாகவும், மடியேந்திகளாகவும், வாங்கித் தின்னிகளாகவும் இருந்துவிட மாட்டார்கள்.

தமிழக அரசு இத்தகைய சலசலப்புக்கும், குள்ளநரி தனத்திற்கும், இரந்து குடிப்பான்களுக்கும் அஞ்சாது பணிபாற்றட்டும். 'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை' என்னும் குறள் கற்றவர்கள் இங்குள்ள அமைச்சர்கள் என்பதை உலகறியச் செய்யட்டும். பதுக்கல் சரக்குகளை வெளிக்கொணரச் செய்த முயற்சியினை, உயர்நெறி மன்றம் போய் முறியடிக்கும் வீணர்களும், துணிவான நல்ல செயல்களை உவந்து வரவேற்காத குருடர்களும் நிறைந்த தமிழ் மண் இது, மக்கள் உயிர் வளர்க்கும் பயிர்களிடை முளைத்த களைகள்போல்,மக்களின் உணர்வு வளர்க்கும் நல்லாரிடையும், பொல்லார் முளைத்துப் புறமுதுகிடல் உலக உண்மை. இவ்வுண்மை இவ்வரசினர்க்குத் தெரியாததன்று. உணரமுடியாத ஒன்றுமன்று.

எனவே தமிழக அமைச்சர்களே! ஆட்சிக் காலம் குறுகியதே ஆயினும், இந்தி வீழ்ச்சியுறும்படி என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனை வினைப்பாடுகளையும் ஒன்றுவிடாமல் நின்று நிலைகுலையாது செய்துவிட்டு வாருங்கள்! பக்தவத்சலங்கள் அடிமைக்கு அறைந்த ஆணிகளைப் பிடுங்கித் தில்லியை நோக்கி வீசியெறியுங்கள்! அவர்கள் நட்ட நச்சுப்பயிர்களைக் களைந்தெடுத்து வடவர்க்குப் படையலாக அனுப்பிவையுங்கள். ஆரியரும் வடவரும் இத்தமிழகத்தை அடிமை கொண்ட வரலாற்றை மாற்றி எழுதிவிட்டு வாருங்கள். அவர்கள் நட்ட 'சாதி' மரங்களையும், கொட்டிய பழங்கதைக் குப்பைகளையும் அகற்றித் தூய்மையும் வாய்மையும் நிறைந்த தமிழர் குமுகாய அமைப்பிற்கு வித்திட்டுவிட்டு வாருங்கள். நூறு நூருயிர சுப்பிரமணியன்களும், வேங்கடராமன்களும், இராசாசிகளும், சேத் கோவிந்த தாசுகளும், இந்திரா காந்திகளும் வந்து முட்டி மோதிக்கொண்டாலும், ஆட்டி அசைக்க முடியாதபடி தமிழ்மொழி வரலாற்றையும், தன்மான நெடுமரத்தையும், பண்பாட்டுக் கூடங்களையும் ஆழப் பதியுமாறு

ஊன்றி விளம்பரப்படுத்திவிட்டு வாருங்கள். இந்திய ஒருமைப்பாட்டின் வரலாறு இந்தி மொழியோடு ஒழிந்து போனது என்று எதிர்காலத் தமிழ் வரலாறு சிந்து பாடும்படி நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் யாருக்காகவும் அஞ்ச வேண்டுவதில்லை. உலகில் உள்ள 7½ கோடித் தமிழர்களுக்கும் பெருமை தருமாறு நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் தமிழன் ஒவ்வொருவனும் கைதட்டி வரவேற்பான்; மனங்குளிரப் பாராட்டுவான். மொழி, இன, நில வரலாறு நோக்கி நீங்கள் வரையப்போகும் வரலாற்றின் ஒவ்வொரு வரியும், எதிர்காலத் தமிழன் ஒவ்வொருவனுக்கும் ஏற்படப்போகும் இழுக்கலுக்கு நல்ல ஊன்று கோலாக விளங்கட்டும். அந்த நல்ல நினைவை நோக்கி — நிலையை எதிர்பார்த்து நீங்கள் நடந்து செல்கையில், இங்குள்ள வீணர்களால் போடப்படும் மலைத்தடுப்புகள் வெறும் மண்ணுங்கட்டிகள்! அவற்றைப் புறந்தள்ளிவிட்டுத் தாண்டிப்போகும் உங்கள்மேல் விழப்போகும் பூவிதழ்கள் அப்பப்பா, உயர்ந்த பொன்னுங் கட்டிகள்!

இறுதியாக, எந்த வகையிலேனும், எந்தச் சிறு தொளையையாகிலும் ஏற்படுத்திக்கொண்டு, அதில் இந்திப் பருமத்தைப் போட்டுத் தமிழர்களின் உள்ளத்தைக் கடைந்து, அரசியல் வெண்ணெய் திரட்டிவிடலாம் என்று கனவு கண்டுகொண்டிருக்கும் வடநாட்டு இந்தி வெறியர்களுக்கும், அவர்கள் வெறித்தனத்திலேயே தங்கள் மொழி, இன நலன்களையும் வறுத்தெடுத்துக்கொள்ளலாம் என்பதே குறியாகக் கிடக்கும் தென்னாட்டு ஆரியப் பார்ப்பனர்களுக்கும் ஓர் எச்சரிக்கை: என்ன வகையான எத்தும், புரட்டும், சட்டமும், திட்டமும் பேசியாவது — செய்தாவது, இத்தமிழகத்தின் மழலை வாய்களிலும் பிஞ்சு நெஞ்சங்களிலும் இந்தியைப் புகுத்திவிடலாம் என்று கனவு காணாதீர்கள். தமிழக விடுதலையை எண்ணினோம்; விரும்பினோம; கேட்டுக்கொண்டுள்ளோம். இதனைக் கேளாமலேயே எடுத்துக்கொள்ளும்படி ஒரு கட்டாயத்தை எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்காதீர்கள். அந்நிலை ஏற்பட்டு விட்டால் உங்களுக்கும் எங்களுக்கும் இணைப்புப்பாலமாக இருந்து கொண்டிருக்கும் ஆற்றல், எத்தகைய பேராற்றலாகவிருந்தாலும், அவ்வாற்றல் தமிழர்களின் ஊற்றுப் பெருக்கெடுக்கும் உள்ளுணர்வின்முன் வெறும் பஞ்சுத் துகள்களாக ஊதி யெறியப்படும் என்று அறிந்து கொள்ளுங்கள். அரசியல் நாகரிகத்திற்கு இடம் வைத்து அரசியல் நடத்துங்கள். எங்கள் கருத்துகளுக்கு நீங்கள் மதிப்புத் தராதவரை, உங்கள் கருத்துகளுக்கும் நாங்கள் மதிப்புத்தரப் போவதில்லை. தில்லி அரசு ஆழ்ந்து நினைத்துப் பார்க்கட்டும். தமிழக அரசு துணிந்து செயல் படட்டும்.

—பெருஞ்சித்திரன்.

# நூறாசிரியம்

## துரை-மாணிக்கம்

பாட்டு: ரு.

ஊரே, பெடையடை உயிர்க்கப் புறம்போய்ப்
பூரிப் பசுங்கதிர் கொய்துவந் தூட்டும்
புறவினங் குணுகிறை மாடக் கூடலே;
உறவே கரவில் உளமொழு கியரே;
ஆயே, மைம்புகை கூர்ங்கண் அளைப்ப
ஒயா தட்டுறை கொம்பறு கொடியே!
நீயே, மாலுமென் நெஞ்சுட் புகுந்து
மேயுறு நினைவிற் காயவோ ருயிரே!
யானே இளநகை கேட்டி
கூன்பிறை நுதலிற் சாந்தணி வோனே!

பாட்டு: ரு.

பொழிப்பு: என் ஊராவது, பெடைப்புறவு அடைகிடந்து உயிர்த்தல் செய்ய, சேவற் புறவு ஊர்க்குப் புறத்தே போய், புடைந்த பசுங் கதிர்களைக் கொய்து வந்து மகிழ்ந்து ஊட்டி, அதற்கு நலஞ் செய்யும் அன்பு நிறைந்த புருக்கள் இனம் குணுகும் ஓசை நிரம்பிய இறைவன் கோயில் மாடம் மிகுந்த கூடல் நகரம். என் உறவாவது, கரவு இல்லாத உளத்தான் ஒழுகியர் கூட்டம். என் ஆயோ, கருமை சூழ்ந்த புகை தம் கூர்த்த கண்களை அளைதல் செய்து வருத்தும்படி, ஓயாமல் அடுதல் அறையில் உறைந்துகிடக்கும் கொம்பு இழந்த கொடிபோன்ற உடலினள். நீயோ, நின்பால் மயங்கிக் காதலுற்ற என் நெஞ்சின் உட்புகுந்து மேய்தலுறும் நினைவிற்குப் பற்றுக்கோடாகிய ஓர் உயிர். யானோ, இளநகை புரியும் நீ கேட்பாயாக, நின் பிறைபோலும் வளைந்த நெற்றியில் செஞ்சாந்து (குங்குமம்) அணிதற்கு உரியவனே!

விரிப்பு:

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவனும் தலைவியும் தம்முள் எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் விரும்பித் தேரிய பின்னர், தலைவி, தலைவனின் ஊரும் உறவும் சுற்றமும் விரும்பிக் கேட்கத் தலைவன் விடையாக மொழிந்தது.

ஒருவரின் பண்பு, பழக்கம் முதலியவை சூழலால் அமைதல் உண்மையின், ஊர் கூறிய மட்டில் அவை அறியப் படுதல், இயலும் ஆகலின், முதற்கண் ஊரைக் கூறினான் என்க. 'சான்றோர் பலர் யாம் வாழும் ஊரே' என்ற புறநானூற்றுப் பாடலடியும் ஊர்க்கும் வாழுநருக்கும் தொடர்பு காட்டி நின்றது.

இனி, ஊர் கூற வேண்டியவன் வாளா ஊரின் பெயரை மட்டும் உரையாது அவ்வூரின் கண் விளங்கும் சிறப்பான ஒரு நிகழ்ச்சியும் கூறித் தன் ஊரின் தன்மையை நன்கு விளக்குதல், கேட்பார் மனம் பொருந்திக் கேட்டல் வேண்டும் எனற்கு.

பெண் புறா அடைகிடந்து உயிர்த்தல் தொழில் செய்தலையும், ஆண் புறா அதன் துணைக்கு, ஊர்ப்புறத்தே போய் வளைந்து பருத்த பசுங்கதிரைக் கொய்து வந்து மகிழ்ச்சியுடன் அதன் வாய்க்கு ஊட்டு

தலையும் கூறித் தம் ஊரின்கண் வாழும் மக்கள் அன்புடையராக இருப்பர் என்பதைத் தலைவிக்குக் குறிப்பால் உணர்த்திக் காட்டினுன் என்க.

ஐயறிவு படைத்த பறவையினங்களும் அன்பு நிறைந்த இல்லறம் செய்து வாழும் தன் ஊரின்கண், ஆறறிவு படைத்த மக்கள்தம்மின் அன்பு நிறை வாழ்க்கைக்கு அளவும் வேண்டுவதோ என்று தலைவன் கூறித் தான் வாழும் ஊர்மக்களின் நல்லன்பையும், அதன் வழித் தான் கொண்ட மெய்யன்பையும் தலைவிக்கு உணர்த்தினுன் என்க.

இனி, அன்பு நிறைந்த மக்கள் வாழும் நகராக இருப்பதுடன் அதனைச்சுற்றி வளம் நிறைந்த வயல்களும் மலிந்து கிடப்பதையும் அதன் வழித் தன் ஊர் வாழ்க்கை வளத்திற்கு ஏற்ற ஊரே என்பதையும் உணர்த்த, அதன் புறத்தே புடைத்து வளர்ந்த பசுமையான கதிர் நிரம்பிக் கிடத்தலைத் தலைவிக்குக் கூறினுன்.

**கொய்து வருதல் இயல்பும், கொய்து உவந்து ஊட்டுதல் சிறப்புமாம்.**

இல்லற ஒழுக்கத்தைப் புறவினமும் கடைப்பிடித்துவாழும் மாடங்கள் நிறைந்த கூடல் நகரம் என்பது தலைவன் குறிப்பு.

புறவினம் குனுகு இறை மாடக் கூடல் என்றது புறவினம் குனுகுதல் ஒலி நிறைக்கும் இறைவன் திருமன்று நிறைந்த கூடல் நகரம் எனல் வேண்டி.

புறவினம் குனுகுகின்ற ஒலி, ஊர்மக்கள் மகிழ்வால் ஆரவாரிக்கும் குறிப்பை உணர்த்திற்று.

இனி, ஊர் கேட்ட அளவிலேயே, தலைவியொடு தான் கூடிவாழ்தற்கு ஏற்ற நிமித்தக் கூற்ருக, அவன் வாழும் நக்ரைக் கூடல் என்பான், வெறுங் கூடல் என்னுது, மாடக் கூடல் என்றது, தான் தலைவியின்பாற் கொண்டது பெருமை பொருந்திய காதல் ஆகும் எனல் வேண்டி. இனி, வெறும் மாடக் கூடல் என்னுது இறை மாடக் கூடல் என்றது, இறையவன் கோயில் நெடிது நிற்கும் ஊரின்கண் வாழ்தல் செய்யும் தன் காதலின் உண்மையைக் குறிப்பால் உணர்த்துவான் வேண்டி. 'இறைவன் வாழும் ஊரினின்று வரும் யான் பொய் வழங்கேன்; நின்னெடு கூடி, இல்லறம் நடத்தும் உறுதிப்பாடு உடையேன்' எனக் குறிப்பால் உணர்த்தினுன் என்க.

"நான் நின்னைக் கூடுதற்கு ஏற்றவன்;உயர்ந்த-பெருமை கொள்ளும் காதல் நெஞ்சன்; மெய்யான அன்புள்ளவன். மணவாழ்க்கையை அறவாழ்வில் நடத்த விரும்புபவன்; வளம் பொருந்திய ஊரினன் ஆகலின் வறுமை போதர வழியில்லை; என்றன் ஊர் கூடல் மா நகர்-என்பது அவன் சுற்றிச் சாற்றிய கருத்துகள்.

உறவே கரவில் உளமொழுகியரே: எனக்கென்று உறவேதும் இல்லை. கரவில்லாத உளவழி ஒழுகி நிற்பார் எவரும் என் உறவினரே! நீயும் கரவில்லாத உளங்கொண்டு நிற்கும் அன்பொழுக்கத்தினள் ஆகலின் நீயும் என் உறவுக்குப் பொருந்தியவளே.

ஒத்த அன்பும் ஒழுகலாறும் உடையர் யாவரும் உறவினர்களே என்பதால், நீ இனம், குலம், பிறப்பு முதலிய பொய்மை உறவுகளைப் பார்க்கவேண்டுவதில்லை என்று குறிப்பால் கூறினான் என்க.

மைம்புகை கூர்ங்கண் அளைப்ப-கருமையான புகை தன் கூர்மையான கண்களை அளாவுதல் செய்து வருத்த; கூர்ங் கண்: கூர்மையாக உற்று நோக்குங்கண். முதுமையுற்றார் தம் கண் பார்வையைக் கூரிய தாக்கி உற்று நோக்குவர் ஆகலின், தாய் முதுமையுற்றவள் எனபதை உணர்த்தக் கூர்ங்கண் என்றான் என்க.

ஓயாது அட்டு உறை: சமையல் அறையில் ஓயாது உறைகின்ற.

கொம்பறு கொடி: கொம்பிழந்த கொடி. தாய் கணவனை யிழந்தவள்- என்பதாகக் குறிப்புக் காட்டினான் என்றபடி.

தாய் முதியவள்; கணவனை இழந்தவள்; சமையல் அறையிலேயே உறைபவள்- என்றது, அம் முதிய தாய்க்குத் துணை வேண்டுதற்காக தான் விரைந்து இல்லறம் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமையையும், அவளுக்குத் துணையாகத் தான் தன் மனைவினைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதையும் குறிப்பினால் உணர்த்தினான் என்றபடி.

தாய் கணவனையும், தான் தந்தையையும் இழந்தமையால், தன் மணம் பேச வேறு பெரியோர் இலர் என்பதையும், அதுபற்றித்தானே மணம் பேசம் தகுதியுடையவன் என்பதையும் குறிப்பால் கூறினான் என்க.

மாலும் என் நெஞ்சு: மயக்குறும் என் நெஞ்சம். அழகாலும், அன்பாலும் மகிழ்தலால் மயக்குற்ற நெஞ்சம்.

நீயே மாலும் என் நெஞ்சுட் புகுந்து மேயுறு நினைவிற்கு ஆய ஓர் உயிர்: மயக்குற்ற என் நெஞ்சினுட் புகுந்து என் நினைவுகள் எல்லாவற்றினும் கலந்து நிற்பதாகிய ஓர் உயிர் நீ.

மேயுறு நினைவு – கலந்து நிற்கும் நினைவு – ஆட்கொள்ளப்பட்ட நினைவு.

ஓர் உயிர்–ஒரே உயிர். உடலோடு ஒன்றினை என்று கூறுது உயிரோடு ஒன்றினை என்று கூறினான் என்க. நினைவிற்கு ஆய ஓர் உயிர் என்றது என் எல்லாவகை நினைவுகளுக்கும் பொருந்தி நிற்கும் ஒரே உயிர் என்பான் வேண்டி.

தனக்கு அவள் உயிராக நின்றனள் என்பதால், இனி அவளில்லாமல் தான் வாழ்தற்கியலாத உடல் போன்றவன் என்னும் குறிப்புக் காட்டினான் என்றவாறு.

யானே! இளநகை கேட்டி! இது காறும் தன் ஊர் பற்றியும், தன் உறுவு பற்றியும், தன் பெற்றாளாகிய தாய் பற்றியும், தனக்குற்றாளாகிய தன் காதலி பற்றியும் உரைத்து வந்த அவன், இனித் தன்னைப் பற்றிச் சொல்லத் தொடங்கினான் என்றபடி.

இவ்வாறு இறைச்சிப் பொருளால் தன் ஊர், உறவு, தாய், காதலி முதலியோர் பற்றிக் கூறிய அவ்வளவையும் கூறக்கேட்ட அவள், அவன் தன்னைப்பற்றிக் கூற வருங்கால், அதனை மிகு விருப்போடும், வியப்போடும் கேட்கும் முகத்தினளாய் இளநகை புரிந்தாள் ஆகையால் அவளை இள நகை என்று விளிக்க வேண்டுவதாயிற்று.

இவ்வளவும் கூறியவன், தன்னைப்பற்றி இறுதியாகக் கூறும் முடிவுபற்றி அவள் அறிந்து கொள்ளும் விருப்பக் குறிப்பை, அவர் எதிர்நோக்கியிருந்தமையாலேயே அவளுக்கு நகை பிறந்தது என்க. அவ்வாறு பிறந்த நகை முற்றும் வெளிப்படின் அஃதவள் பெண்மைக்கும் நாணத்திற்கும் இழுக்காய் அமையும் என்றதால், அவள் விருப்பக் குறிப்பை இளநகையாக வெளிப்படுத்தினாள் என்க.

# புதிய சட்ட அமைப்பு வேண்டும்.

**ம. இலெ. தங்கப்பா.**

தமிழர் தமிழால் கற்றல் வேண்டும்;
தமிழர் தமிழால் ஆள்தல் வேண்டும்;
இவை பிறப் புரிமை. இவற்றுக்கு மாறாய்
எவை எவை கூறினும் அவையெலாம் பிழையே!
நாலரைக் கோடித் தமிழர் இம் மண்ணில்
வாழ்வதற் குரிமை பெற்றவர் என்றால்
அத்தனைப் பெயரும் அருந்தாய் மொழிவழிக்
கற்றலுக் குரிமை பெற்றவர் அல்லரோ?

"ஆங்கிலம் வேண்டா என்போ மாயின்
இடுக்கில் இந்தி நுழைந்திடும், அதனால்
ஆங்கில வாயிலாக் கல்வியும் பெறுவோம்
ஆங்கில வாயிலா ஆட்சியும் செய்வோம்''
என்பர்; இஃதொரு புதுவகைக் கரடி!

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

**கேட்டி – கேட்பாயாக.** இதுவரை நான் சொல்லியதை அரை குறையாகக் கேட்டிருப்பினும், இனிமேல் சொல்லப்போவதையே அவள் முழுக் கவனத்தோடு கேட்க வேண்டும் என்பதால் கேட்டி என்று கூறுகிறான் என்க.

**கூன் பிறை நுதல்:** வளைந்த பிறைபோலும் நெற்றி.

**யானே–சாந்தணிவோனே!** நின் வளைந்த பிறை போலும் நெற்றி யில் செஞ்சாந்து அணிதற்கு உரியவன் யானே.

யான் நின்னை மணத்தற்கு உரியவனே என்றான் என்க.

யானே–என்றது உறுதிப் பாட்டிற்கு.

இப்பாட்டு 'குறிஞ்சியென் திணையும்' இயற்கைப் புணர்ச்சிக் காலத்து, தலைவன் தலைவியைத் தெருட்டிக்கூறி உயிரென்றுரைத்த துறையுமாம்.

(வளரும்)

இந்திச் சட்டியில் வறுபடல் அஞ்சி
ஆங்கில நெருப்பில் வீழ்ந்து படுவதோ?
ஆங்கிலம் நமக்கு வேண்டும் என்றால்
நாம் அதன் பயனை ஆள்தல் வேண்டும்;
நம்மை ஆங்கிலம் ஆள விடுவதோ?

இயற்கை அறிவை இலக்குதல் தாய்மொழி.
இயற்கை உணர்வை எழுப்புதல் தாய்மொழி.
அயல் மொழிப் பயிற்சி யிங்(கு) ஆழவே கொள்ளினும்
மயலறு தெளிவதில் பெறுதல் இல்லை.
வியன் உள உணர்வுக்கு விடுதலை இல்லை!
விடுதலை தருவது தாய்மொழி ஒன்றே!
ஆங்கிலம் அறிவை அள்ளி வழங்கினும்
பாங்குறும் இலக்கியம் பற்பல தரினும்
எத்துணை அளவில் அது துணை வரினும்
அத்துணை அளவினும் அது துணை மொழியே!
துணைப்பயன் கருதி ஆங்கிலம் கற்கலாம்.
முதற்பயன் கருதித் தாய் மொழி இடத்தினை
அதற்களித் திடுதல் அறிவோ, அறைக!

தாய்ப்பால் அருந்தும் சேய்க்கு, மேலும்
ஊட்டச் சாரம் புகட்டுவ மாயின்
தாய்ப்பால் உணவைத் தடைசெய் யாமல்
கடைப்பால் தன்னையும் கட்டுப் பாடாப்
புகட்டல் சாலும், அதன் நலம் கருதி!
தாய்ப்பால் இருப்ப அதனை மறுத்துக்
கடைப்பால் புகட்டல் நலமோ? கழறுக!

''உலக அறிவெலாம் ஆங்கிலம் தருமே!
புதியன தமிழில் இல்லையே'' என்பர்.
இல்லை என்னில் கொணர்தலே முறைமை!

கற்ற ஒவ்வொரு தமிழனின் கடமை
கற்றவர் சிற்சிலர் முயல்வதற் கஞ்சி
உற்ற நாலரைக் கோடி மக்களே
வெற்று முயற்சியில் விழலாக் குவதோ?
பிறமொழி வாயிலாப் பெற்ற அனைத்தையும்
பேசவும் எழுதவும் தன்மொழி வேண்டும்.
பிறமொழி வாயிலாப் பெற்ற அறிவினைப்
பிறமொழி வழித்தான் பேசவும் எழுதவும்
வேண்டும் என்றால் தன்மொழி எதற்கு?
வீட்டுத் திண்ணையில் குந்தி இருந்து
பாட்டிப் பழங்கதை பேசிக் கொள்ளவோ?
அடுப்பங் கடையில் மணைமேல் அமர்ந்து
சுடச்சுடத் தோசைக்குத் தொட்டுக் கொள்ளவோ?

இந்திய ஒருமை குலையுமே என்பர்!
உரிமைக் கிடமிலா ஒருமையோ ஒருமை?
வெறியர்க் கடங்கிடும் ஒருமையோ ஒருமை?
தமிழர் பிறரொடு தொடர்பு கொள்ள
அவர்க்கும் இவர்க்கும் பொதுவாய் நிற்கும்
ஒருமொழி வேண்டும்; ஆங்கிலம் உண்டே!
ஆங்கில வாயிலா அதுநிறை வேறவும்
ஆங்கில வாயிலா அறிவு பெறவும்
அனைத்துல கத்தின் உறவு பேணவும்
இயலும் என்கையில் இந்தி எதற்கு?
ஒருமைப் பாட்டை வளர்க்குமோ இந்தி?
வடவர்க்குத் தமிழரை அடிமைப் படுத்துமே!
இந்திய அரசியற் சட்டமே பெரும்பிழை!
செருப்புக் கேற்பவோ காலைச் செதுக்குவோம்?
அவரவர் உரிமைக் கேற்பப்
புதியதோர் அமைப்பினை இந்தியா புனைகவே!

-oOo-

சாமு. ஆபிரகாம். கலைத்தலைவர்; அறிவியல் முதுவர்; ஆ. ப.
உயிரியல் துறைத்தலைவர். அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

# உயிர்கள் உட்கிடையை உணர்த்தும் வகைகள்

மாலை வேளையிலே ஆற்றங்கரையிலே காகங்கள் வரிசை வரிசையாய்ச் சில வேளைகளிற் வீற்றிருப்பதைக் காணலாம். திடீரென ஒரு காகம் பறந்து பக்கத்து மரத்திலமருமானால் மற்ற காகங்கள் அதை கவனிக்காமலிருக்கலாம். சில பொழுதுகளில் 'கா, கா' என்று அழைக்காமல் ஒரு காகம் பறந்து செல்கிறது; அப்போது அதனுடைய வாழ்க்கைத் துணை மட்டுமன்று, மற்ற காகங்களும் பாய்ந்து பறந்து சென்று விடுகின்றன. முதலாவது எழுந்த காகம எப்படிப்பிற காகங்களுக்குத் தன் உட்கருத்தை யுணர்த்தியது என்பது இறைவனுக்கே விளக்கம். நானே இவ்வருங் காட்சியைக் கண்ணுற் பருகிக் கருத்தில் எண்ணி மகிழ்ந்துள்ளேன். முற்காலக் கிறித்தவ அடியார் அசிசிவாசி, பிரான்சிசு (Francis of Assissi) பறவைகளோடு பேசியதாகக் கூறப்படுகிறது. நம் நாட்டிலும்கூட அவ்வரிய ஆற்றல் படைத்த முனிவர் இருந்தார்களெனச் சொல்லப்படுகிறது. பிற உயிர்களின் உட்கருத்தை உணர்ந்து கொள்ளும் திறன் நாய்களுக்கு இருப்பது போல் நமக்குக் கிடையாது. நமது ஐம் பொறிகளையும் பிற உயிரிகளின் பொறிகளோடு ஒப்பிடுவோமானால் நமது பொறிகள்

மிகக் கீழ்த்தரமானவை என்றே கொள்ளப்படும். நாய்களுக்குத் தொலை உணர்ச்சியறிவும் (Telepathy) உண்டென்கிருர்கள். உலோரன்சு என்பார் தம் நண்பர்களுடன் அளவளாவும் பொழுது அவர்களில் யாராவது ஒருவர் சற்று மாறுபாடாக நடந்து கொண்டாலும், அல்லது "உனக்கு என்ன தெரியும்" என்று சொல்வான்போல் தற்பெருமையாக நட ந்து கொண்டாலும் உலோரன்சு என்பாரின் நாய், நண்பரின் உடல் நுண்ணியக் கங்களிலிருந்து அவரின் உள்ளக்குறிப் பறிந்து அவரின் உடப்பில் குறிப்பிட்ட பாகத்தைக் கடித்து விடும். உயிரிகளின் உட்கிடையால் உண்டாகும் நுண்ணுடம்பியக்கங்களி லிருந்து, ஓர் உயிரி இன்னேர் உயிரியின் கருத்தை அறிந்து கொள் ளுகிறதென்பதை இதனுல் நாம் தெரிந்து கொள்ளலாம். பேச்சின்மை யால், ஓர் உயிரி இன்னேர் உயிரிக்குக் கருத்துணர்த்தும் நுண்ணியக் கங்களால் (Expressional Movements) மட்டும் தன் உட்கருத்தை உணர்த்த இயலும்.

குதிரைகளுக்கும் ஒருவரின் நுண்ணியக்கங்களிலிருந்து அவரின் உட்கிடையை உணரும் வல்லமையுண்டு. இத்தன்மையால் உலகப்புகழ் பெற்ற சில உயிரிகளைப் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம். ஈண்டுக் கூட்டல் கணக்குச் செய்த குதிரைகளைப் பற்றியும் அடுக்கு எண் களில் (Square Root) கணக்குச் செய்யும் குதிரைகளைப் பற்றியும் சிறிது காண்போம். செருமனி நாட்டிலே வான் ஆசுடன் என்பவரின் கெட்டிக்காரக் குதிரை (Clever Hans) 'இல்லை' ஆம், என்பதற்குத் தலையை ஆட்டும். மற்ற கேள்விகளுக்கு விடையளிக்க முன்கால்களைப் பயன் படுத்தியது. எடுத்துக்காட்டாக, ஒரு கணக்கின் விடை 'ஐந்து' என்ருல் அக்குதிரை ஐந்து தடவை தன் முன்காலால் தரையைத் தட்டும்படி ஆசுடன் குதிரையின் முன் காலைத்தூக்கி ஐந்து தடவைத் தரையைத் தட்டச் செய்தார் அதே சமயத்தில் ஐந்து வரை உரக்கக் கத்தி எண்ணிஞர். இவ்வாறு திரும்பத்திரும்ப ஆசுடன் செய்தமை யால் அவர் குதிரைக் காலைத் தொடாவிட்டாலும் சொன்ன எண் ணுக்குத் தகுந்தாற்போல் தரையைத் தட்டியது. இவ்வாறு இரண்டு ஆண்டுகள் இவ்வாறு பயிற்சியளிக்கப்பட்ட குதிரைகள் கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கல் கணக்குகளைச் செய்யவும், எளிய பின்னங்களையும், பதின பின்னங்களையும் ஒன்றிலிருந்து, இன்னென் றுக்கு மாற்றக்கூடிய ஆற்றலுடையவாயின. கிளவர் ஆன்சு (Clever Hans) என்ற அக்குதிரை மணிப்பொறியில் உள்ள நேரத்தையும்

கூட காட்டியது; இசையையும் கேட்டு மகிழ்ந்தது. அக்குதிரையின் செயலைக் கண்டோர்கள் ஏதோ சூழ்ச்சி அல்லது கவடம் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அக்குதிரையை ஆய்ந்த உளநூலறிஞர்களோ, அதனிடம் கவடமோ அல்லது ஏமாற்றுதலோ இல்லையென அறுதியிட்டுக் கூறினர். இறுதியில் ஃபங்கசுட் (Pfungst) என்ற அறிஞர் உண்மை கண்டார். குதிரை வினவில் சிறிதும் சருத்துக் காட்டாது, வினவுநரை உற்று நோக்குவதில் ஆர்வங் காட்டுவதாக அறிந்தார் அறிஞர் ஃபங்சுட். பின்புதான் ஒளிவுமறைவாயிருந்த குதிரையின் செயல் வெளியாயிற்று; அஃதாவது வினவுநரது உடம்பின் நுண்ணியக்கங்களிலிருந்து குதிரை விடை கண்டது. எடுத்துக் காட்டாக ஒரு வினவுக்கு விடை எட்டு என வைத்துக் கொள்வோம். குதிரை தன் காலால் எட்டுத்தடவை தரையைத் தட்டும்; அப்போது வினவுநரும் தன்னையறியாமலேயே ஒன்று, இரண்டு என்று உள்ளத்தில் எண்ணுகிறார். குதிரையும் அவரைப் பார்த்த வண்ணமாகவேத் தரையைத் தட்டுகிறது. எட்டு என்ற எண் வந்தவுடன் வினவுநர் "போதும்" என்று சொல்வார் போல் தலையைச் சற்று அசைக்கிறார். உடனே குதிரையும் தட்டுவதை நிறுத்திவிடுகிறது (சிறு பிள்ளை பாடம் அல்லது வாய்பாடு சொல்லிமுடியும் போது ஆசிரியர் தலையசைவது கண்கூடு) அவ்வறிஞர் செய்த ஆராய்ச்சி ஈண்டுரைக்கின் விரியும். அதேபோல் அடுக்கு எண்ணிய கணக்கு ($\sqrt{1681}$, $\sqrt{5476}$)ச் செய்த எல்பர் ஃபெல்டு (Elberfeld) குதிரைகளும் அவற்றை உடையவன் செய்த மிகநுண் செய்கைகளிலிருந்து விடை கண்டு பிடித்ததாகக் கண்டறிந்தார் எடல்பொக் (Edelberg) என்ற டென்மார்க் நாட்டார். குரங்கினம் வெளி விரிவு (Evolution)க் கொள்கைப்படி மாந்தரினப் பக்கத்தில் உள்ளது. ஆகையால் உட்கிடையைத் தெரிவித்தல் முறைகள் குரங்கினத்தில் வளர்ந்தோங்கியுள்ளன. இலண்டன் விலங்குக் காட்சி நிலையத்தில் டெசுமண்ட் (Desmond) என்பார் தலைமையில் வாலில்லாக் குரங்குகளின் மொழி பற்றி அறிஞர்கள் பலர் ஆய்ந்தார்கள். குரங்குகளின் முகத்தோற்றத்திலிருந்தோ அல்லது அவற்றின் ஒலியிலிருந்தோ அவை என்ன உட்கிடையைப் புலப்படுத்துகின்றவென்றுரைத்தல் அரிது. காட்டாக மக்கள் பல்லிளித்தல் அவர்களது மனமகிழ்ச்சியைக் காட்டும். ஆனால் குரங்குகள் பற்களெல்லாம் தெரியும்படு வாயைத் திறந்தால், அவை மனமகிழ்ச்சியாயிருக்கின்றவென்று பொருள் கோடல் கூடாது. அச்செயல் ஒருவேளை குரங்கு

ஏதோ தொல்லையிலிருப்பதைத் தெரிவிக்கும் என்கிறார்கள். (Gibbon) குரங்குகளை ஆராய்ந்தவர்கள் அது மகிழ்வுடன் இருக்கும் போது தன் கீழ்ப்பற்களையும், ஆனால் ஏமாற்றமடையும் போதும் சின மடையும் போதும் தன் மேலுதட்டைச் சுழித்து மேற்பற்களையும் காட்டுகின்றதென்கிறார்கள். ஆகையால் மேற்கூறிய செயல்கள் குரங்குகளின் புன்னகை யென்று தவறாகப் புரிந்து கொள்ளுதல் கூடாது.

குரங்கின் உறுமுதல் ஒரு நட்புக் குரலாக இருக்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். குரங்குகள் கொட்டாவி விடுமானால் அவை களைப்புற்றிருக்கின்றவென்று பொருள் கொள்ளக்கூடாது. குரங்குகள் சினத்துடன் பல்லைக் காட்டுமானால் அஃது அயலானை அச்சுறுத்தும் அறிகுறி. ஒலியிடும் குரங்குகளைப் புகழ்பெற்ற கார்பென்டர் (Dr. C. R. Carpenter) என்ற பண்டாரகர், பனமா கால்வாயின் பக்கத்தில் அமைந்துள்ள கான்உயிர்ப் புகலிடத்தில் ஆராய்ந்தார். உரத்த ஒலியிடும் குரங்குகளுக்குப் (Howler Monkeys) பதினைந்து வகையான ஒலிகளிருக்கின்றன வென்றும், அவை ஒவ்வொன்றும் தம் இனத்தைச் சேர்ந்த குரங்குகளின் நடத்தையைக் கட்டுப்படுத்தக் கூடியது என்றும் கார்ப்பென்டர் கண்டுள்ளார். ஒரு புதிய பொருளைப் பார்த்தவுடன் கூச்சலிடும் குரங்கு ''அது யார், யார்?'' என்று கேட்பது போல் உறுமுகின்றது. குட்டிக் குரங்குகள் கட்டுக்கடங்காத விளையாட்டில் ஈடுபட்டு மூர்க்கமாக விளையாடுமானால், முதிர்ந்த ஆண் குரங்கு வந்து குறிப்பிட்ட முறையில் உறுமியவுடன் விளையாட்டு நின்று விடுகிறது; அமைதி நிலவுகின்றது.

ஆகவே உயிரிகளுக்கு ஒலி உட்கிடையைஉணர்த்தும் ஒரு கருவி என்று நாம் உறுதியாய்க் கொள்ளவேண்டியுள்ளது. ஆனால் மொழி என்பது மக்கள்மாட்டும் காணப்படுவது. மாக்களுக்குச் சொல் என்பது கிடையாது. தம் உட்கருத்தையுணர்த்துவதற்கும், மற்றவர்களின் உட்கிடையை உணர்த்துவதற்கும் ஒலியின் நுண்ணிய வேறுபாடுகள் தாம் பயன்படுகின்றன! குரல் உயர்வு, தாழ்வு முதலியவையே மொழியாகப் பயன்படுகின்றன. எடுத்துக் காட்டாக. ஒருநாய்க்கு நல்லசுவையான எலும்பைக்காட்டி, ''இங்குவா உன்னை உதைக்கப்போகிறேன்,'' என்று உறுமுவீரானால் நாய் அஞ்சி உங்களிடம் வராது. ஏனெனில் அவ்வொலி அந்நாய்க்கு அச்சத்தை உண்டாக்கும். அதே நாயைப்

பார்த்துத் தாழ்ந்த குரலில் "இங்கு வா உன்னை அடிக்கிறேன்." என்று நாம் சொல்வோமானால் நாய் வாலாட்டி ஓடிவரும். போரிசு ஈடார் என்ற உலகப்புகழ் பெற்ற அரிமாப்பயிற்றுநர் ஒவ்வொரு நாளும் வேடிக்கைக் காட்சி முடிந்த வுடன் அரிமாக்களின் கூ ண் டு களுக்குச் சென்று ஒவ்வோர் அரிமாவையும் புகழ்வார். காட்சியின் போது நன்றாக நடித்த அரிமாவைப் புகழ்வது போல உரத்த குரலில் கத்தினால், அஃது அவர் பக்கத்தில் வராது. கூண்டில் மூலையிற் பதுங்கிவிடும். ஆனால் மெல்லிய குரலில் திட்டினாலும் "அது தன்னைப் புகழ்கிறார் எ ன் று எண்ணிக்கொண்டு அவரண்டை அது வரும்" என்கிறார் ஈடார்.

கருநாடக இசையில் மண்டூக தாளம் என்று ஒரு தாளம் உண்டு. இவற்றுள் மண்டூக தாளத்தைப் பற்றிச் சற்று எண்ணுவோம். நன்றாக மழை பெய்து ஓய்ந்த நள்ளிரவில் வெளியே செல்வோமானால் தவளை இசையைக் கேட்கலாம். க்ரிக்-க்ரிக் என்று ஒரு தவளையின் ஒளி நம் காதைத் தொளைக்கும். இன்னொரு வகையான தவளை டிக்-டிக்-டிக் என்று நல்லியம் இசைக்கும்; பி றி தொ ரு தவளையின் கர்டங்-கர்டங் என்ற இனிய தாளம் நம் காதுக்கு நல்விருந்ததாகும். வேறொரு தவளை டிக்-டிக்-டிக்ரிக்-கிர்ரிக் என்று ஒலியிடும். ஓரியப் - ஓரியப் என்று ஓயாது பாடும் இன்னொன்று. ஆத்திரேலியா உயிர் நூல் ஆய்வாளர்கள் இலிட்டில் சான் (Little Jhon) குறிப்பிட்ட சில இனங்களைச் சேர்ந்த ஆண் தவளைகளின் இசையைத் தட்டுகளில் (Gramaphone plates) பதிவு செய்தார். பின்னர் ஒரு தொட்டியில் ஒரு பெண் தவளையை இட்டார். பின்னர் அப்பெண் தவளை இனத்தைச் சேர்ந்த ஆண் தவளை இனத்தைப் பதிவு செய்திருந்த நாடாவை அத்தொட்டியின் ஒரு கோடியிலும் இன்னோர் இனத்தைச் சேர்ந்த ஆண் தவளையின் ஒளிப் பதிவு செய்திருந்த நாடாவைத் தொட்டியின் இன்னொரு கோடியிலிருந்தும் ஒலி பரப்பினார். நடந்ததென்ன? அப்போது அப்பெண் தவளை தன் இனத்தைச் சேர்ந்த ஆண் தவளையின் குரல் எத்திசையிலிருந்து வந்ததோ அத்திசையிலுள்ள ஒலி பெருக்கிக் கருவியின் பக்கத்தில் போய் அமர்ந்தது. சில வேளைகளில் நீரினின்று வெளியே வந்து அதன் மேலும் அமர்ந்தது. ஒரு தவளைக் குரலின் சுரநிலை (Pitch) குரல் (Tone) அளவு (Volume) முதலியவற்றிலிருந்துகுறிப்பிட்ட தவளை எவ்வினத்தைச் சேர்ந்தது எவ்விடத்தைச் சேர்ந்தது என்பனவற்றை அறுதியிட்டுக் கூறலாம் என்கிறார் இலிட்டில் சான்.

# பார்புரக்கப் பாடுமின்!

[புதுவை. சுப்பிரமணியன்]

வானுலவு முகிலினம்போல் வரையிகந்து நெஞ்சமெனுங்
கானுலவு நினைவுகளைக் கவினுறுசொல் தொடைபயக்குந்
தேனுலவு பாக்களிலே சிறைப்பிடிக்கும் பாவலர்காள் !

நீர் பரப்பும் பாவலைகள் நிலைத்திருக்குஞ் செந்தமிழின்
சீர்பரப்புந் திருப்பணியால் சிறப்புறுதல் அழகாமே !

நீர் விரிக்குங் கண்ணியெலாம் நெடும்பொழுது நிலைபெற்றுப்
பார்புரக்குஞ் செந்நெறியிற் படிந்திருத்தல் நலமாமே!

நீர்தொடுக்குஞ் செய்யுளெலாம் நீணிலத்தில் அறங்காக்கப்
போர்தொடுக்கும் படைக்கலமாய் பொலிந்திருத்தல் சிறப்பாமே!

எனவாங்கு,

உள்ளுவ தெல்லாம் உயர்வே உள்ளித்
தெள்ளிய யாப்பில் திணித்து
விள்ளுக உலகில் வியன்புகழ் பெறவே!

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மீன்களுக்கும் ஒரு மொழியிருப்பதாக அமெரிக்க மீனியல் வல்லுநர் அறிந்துள்ளார்கள். அவர்கள் கடலுக்கடியில்ஒலியை அளவுக்குங் கருவி (Hydrophaul)யை அனுப்பி மீன்கள் உண்டாக்கும் ஒலியை ஆராய்ந்துள்ளனர். பிற்பாடு ஆழ்முழ்கி (Bathys caphe) என்ற கருவியால் கடலுக்கடியிற் சென்று மீன்களின் ஒளியை ஆராய்ந்தனர். ஒரு மீன் ஒரு வகையான ஒளியிடுமானால் மற்ற மீன்கள் அதனிடம் வந்து சேருவதைக் கண்டனர்.

இவ்வாறு உயிர்களின் மொழி பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஈண்டுச் சொல்லியவை தவிர இன்னும் பல முறைகளில் உயிர்களிடையே உட்கிடை பரிமாறுதல் நடக்கலாம். இயற்கை அன்னை தன் மடியில் வைத்துள்ள. மறை பொருள்களை அறிதல் அவ்வளவு எளிதோ ? O

— மணிவேலன் —

# தமிழ்நாட்டு உடை

காற்சட்டை மேற்சட்டை என்றுரைத்தால்
வாயெல்லாம் கசத்தல் உண்டோ?
மேற்கத்தி மொழியின்றேல் குடிமுழுகிப்
போய்விடுமோ? மீசையற்றீர்!
வேற்றுனின் மொழியாலே ஆடைகளின்
பெயர் சொல்லி வீணில் தென்றல்
காற்றினை நீர் ஒதுக்கி விட்டே எச்சிலையைச்
சுழற்றுபுயற் காற்றை ஏற்றீர்!

காளையின் கண்கட்ட கன்னியர்கள்
கட்டுகின்ற கச்சு தன்னை
ஊளையிடு மொழியினிலே "பிளவுசு" என்றே
சொல்வதிலென் அயர்வைக் கண்டீர்!
வாளுக்கே உறையிட்டுக் கூர்மையினைக்
காத்தல் போல் மகளிர் மீது
தோளிருந்து தாள்வரைக்கும் துவள்கின்ற
சேலையினைச் "சாரி" என்பர்!

தைத்கின்ற உடையெல்லாம் தமிழ்ப்பண்பை
ஒரு நொடியில் தகர்த்து விட்டே
மொய்க்கின்ற கண்ணெல்லாம் நங்கையர்கள்
மீதிழுத்தால் மேன்மை யுண்டோ?
கைக்கின்ற பொருளாக்கிக் கன்னியரை
அழித்திட நீர் கருதி விட்டீர்!
வைக்கின்ற உடைப் பெயரோ தமிழுக்கு
நஞ்சாக வாய்த்தல் நன்றோ?

மானத்தை மட்டிலுமே மறைப்பதற்கே உடுத்த
வுடை மாந்தர் பண்பு
வானத்து நிலவாக வளர்கையிலே
உடன் வளர்ந்து மறைத்த தந்நாள்!
கூனிலவாய்ப் பின்னுளில் தேய்வதுபோல்
மகளிருடை குறுகித் தேய்ந்து
வானொரு நாள் இருண்டது போல் மகளிருடை
போமென்றே மாழ்கும் நெஞ்சம்!

காட்டாற்று வெள்ளத்தின் அழிவினையே
தடுப்பதற்குக் கட்டுகின்ற
ஊட்டமிகு அணை போன்றே மங்கையரின்
அழகுடற்கும் உடையை இட்டார்!
மேட்டணையை உடைத்தாலே வெள்ளத்தால்
அழிவுவரும் மெய்யைக் கண்டும்
போட்டிருக்கும் உடைகுறைப்புச் செய்கின்றார்...
பண்பெல்லாம் புரண்டே மூழ்கும்! O

## அன்பளிப்புக்கு நன்றி !

தென்மொழியின் ஊத்துக்குளி முகவரும் தனித்தமிழ் ஆர்வ மிக்கவரும் ஆகிய திருவாட்டி. மான்விழி மனோகரன் அவர்களுக்குக் கடந்த இரட்டை (ஆனி) மாதம் 30–ஆம் பக்கல் பெண் குழந்தை ஒன்று பிறந்ததன் நினைவாகத் தென்மொழிக்கு விடுத்த அன்பளிப்புத் தொகை உருபா. 6–89ஐப் பெற்றுக் கொண்டோம். அவர் பெற்ற செல்வக் குழந்தையும் அவரும் பன்னலமும் பெருகப் பல்லாண்டுகள் வாழ்ந்து, எந்தமிழ்க்கு ஈடிலாத் தொண்டாற்ற வாழ்த்துகின்றோம்.

—அமைச்சர்.

# பிராமணர்களின் அங்கலாய்ப்புக்குப் பிற இனத்தார் ஒருவரின் ஆறுதல் மடல்!

—வி. இரா. சந்திரன். க. இ. (பி. ஏ.)

(திரு. வி. இரா. சந்திரன். க. இ. (பி ஏ.) அவர்கள் பழைய ஒப்புரவு ((Justice)க் கட்சியைச் சேர்ந்தவர். இந்தியா தன்னுட்சி பெறும் முன்பிருந்தே அக்கால அரசியலில் ஈடுபட்டுத் தமிழர்களுக்காகவும் தமிழக விடுதலைக்காகவும் பேராயக் கட்சிப் பெருந்தலைவர்களையெல்லாம் நேருக்கு நேர் நின்று கண்டித்த பகுத்தறிவுக் கொள்கை உடையவர் அவர். பெரியாரின் அன்பர். இக்கட்டுரையில் சூடும் கொதிப்புமாக, அவர் கொட்டியிருந்த கருத்து நெருப்புக்குத் தனித்தமிழ்ப்புனல் ஊற்றித் தணிவித்திருக்கின்றேன். இன்னமும் அச்சொற்களில் சூடு இருக்குமானால் அதற்கு நான் என்ன செய்யமுடியும்? ஒரு வேளை அத்தகைய சூடு பட்டாவது இறுகிக் கட்டியாகிக் கிடக்கும் தமிழர்களின் தன்மான உணர்வு உருகி ஓடுகிறதா என்று பார்ப்போம்.

ஆ—ர்.)

1—8—67 'நவசக்தி' இதழில் பிராமணர்களின் சார்பில் சென்னை டி. என். இராமச்சந்திரன் என்பவர், சி. ஆர். இராசகோபாலாச்சாரியாருக்கு எழுதியுள்ள மடலில், "பிராமண மாணவர்களைவிடக் குறைந்த வரிசை (Rank) பெற்ற – பிற இன மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்திருக்கிறது" என்று அங்கலாய்க்கிறார்.

நாமெல்லாரும் ஒன்று – 'பாரதம்' நமது தாய்நாடு – ஒரு தாய் மக்கள் நாமன்றோ – பிரித்துப் பேசும் பிரிவினை மனப்பான்மை கூடாது – என்று தலைமையமைச்சர் இந்திரா முதல் மடல் எழுதிய டி. என். இரா. வரை, அல்லும் பகலும் தம்பட்டமடிக்கும் – பிராமண தேசியம் எத்தகைய பொறாமைத் தீயில் கொதித்துக் கொண்டுள்ளது பார்த்தீர்களா? இத்தகைய பொறாமையில் 100–இல் 1 பங்காவது, பிற இன மக்களாகிய நம்மனோர்க்கு 'ஏன்' வருவதில்லை. அப்படி வந்தால் இவ்வின மக்கள் இந்நாட்டில் ஏய்த்துப் பிழைக்க முடியுமா?

ஆங்கிலக் கல்வியும் பண்பாடும் இசுலாமிய சமன்பாடும் இந் நாட்டில் அடியெடுத்து வைக்கும் வரை, படிப்புரிமையும், சொத்துரி மையும் ஆரிய இந்துப் பிராமணச் சட்டப்படியும், வழக்கப்படியும் மறுக்கப்பட்டுக் கொத்தடிமைகளாக்கப்பட்ட 'பிற இனங்களில்' ஒரு சிலருக்குக் கல்லூரியில் இன்று ஏதோ ஒரு சில இடங்கள் கிடைத்து விட்டனவே என்று இப்பிராமண இனத்தவர்க்கு இத்தனைத் தொடை யெரிச்சலா?

'அவாளின்' பொறுமையும், பிறரின் மந்த மதியும்:-

'ஐயர்களுக்குத்தான் வீடு குடிக்கூலிக்கு விடப்படும்' என்ற விளம்பர அட்டைகள் ஆங்காங்கே 'அவாள்' வீடுகளில் தொங்கு வதையும் நினைத்துப் பாருங்கள் – இதோடு சேர்த்துக் கடந்த 20 ஆண்டுகளாகப் பிராமண இனத்தைச் சேர்ந்த – அதுவும் ஒரே குடும் பத்தைச் சேர்ந்த பிராமணர்களே ஆண் – பெண்ணாக மாறி இந்தியா வின் தலைமையிடத்தில் அமர்ந்து கொண்டிருப்பதில் 'பிற இனங் களுக்கு'த் துளியும் பொறுமை ஏற்பட்டதுண்டா? இந்நாட்டின் முதல் – கடைசி இந்திய ஆள்நர் தலைவர் (Governor - General) பிராமணர் என்பதில் நமக்குப் பொறுமை இருந்ததா? இல்லையே! 1937–இல் பேராயக் கட்சி அமைத்த 7 மாநில அரசுகளிலும் 7 முதல் அமைச்சர்களும் பிராமணர்களாகவே இருந்தனர். அதிலும் 'பிற இனங்கள்' மனம் புழுங்கவில்லையே! 1947-இலும் – எல்லா 14 முதன் அமைச்சர்களும் பிராமணர்களே! – டி. என். இரா. கூட்டம் போல், மனம் வெடி வெடித்தோமா நாம்? திட்டக்குழு முழுவதும் பிராமணர் களே நிறைந்துள்ளனர். 'பிற இனங்கள்' 'சடசட' படபட' வெனப் பொரியவில்லையே! அம்மட்டோ? பச்சைப் பிராமணரான வேங்கட ராமனைத் தில்லிக்கு வாழ்த்தி வழியனுப்பவும் செய்கிறோமே!

வெளிநாடுகள் தோறும் செல்வச் செருக்குடன் உலா வரும் 'இந்திய'ப் பன்ன(தூத)ரகக் கூட்டங்களுக்குக்கோ – சொல்லவே வேண்டா – ஏறத்தாழ எல்லாம் 'அவாளே' அல்லது நம்மனோர்க்குப் பட்டை தீட்டுவதில் 'அவாளை'யும் மிஞ்சும் – பக்தவத்சலம் – அள கேசன் போன்ற இனப்பகைவர்களே! இதையும் 'நம்மனோர்' பெரிது படுத்துவதில்லையே!

இன்றும் உருபா 1000 வரை சம்பளம் வாங்கும் நடுவணரசுப் பணியாளர்களுக்கு அவ்வப்பொழுது உயரும் விலைவாசிகளுக்கேற்ற வாறு சம்பளங்கள் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக் கையை எழுப்புகிறார் பச்சைப் பிராமணத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி! இவர்களில் 100-க்கு 90 பேர் பிராமணர்களே என்பது 47–இலிருந்து 'இவாளின்' வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் புரியுமே! 1954–இலிருந்து 1964–க்குள் நடுவணரசு அலுவலகங்களின் ஆடம் பரச் செலவுகள் 115 கோடியிலிருந்து 415 கோடிக்கு உயர்ந்ததென் றும் உள்ளம் வெடிக்கும் உண்மையையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவற்றிலிருந்தெல்லாம் என்ன புரிகின்றதென்றால் பார்ப்பன அரசியல் வட்டாரங்களும், அலுவல் மண்டிலங்களும், பணக்காரர் களும், படித்தவர்களுமே – தன்னாட்சிக்கு உரிய பலன்களையெல்லாம் தங்களுக்கிடையே பங்கு போட்டுக் கொண்டு விட்டார்களென்பதும், கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களான வாயில்லாப் பூச்சிகளுக்கு 1967 தேர்தல் வரை பகிர்ந்தளிக்கப்படவே இல்லை என்பதுமே! இப்படியெல்லாம் இருந்தும் நம்மனோரின் தடித்துப்போன அறியாமை காரணமாக நமக்குப் பொறுமையே ஏற்படவில்லையே!

இப்படிப்பட்ட ஏதுமறியாத இனங்களிலிருந்து இன்று சிலர் மருத்துவக் கல்லூரிகளில் இடம் பெற்று விட்டார்களே என்றுதான், பிராமணர்கள் துடியாய்த் துடித்துத் தங்களின் காவலரான இராசாசி யிடம் – பழங்கால பிராமண முனிவர்கள் – ஆரிய இனக்கடவுள் நாராயணனிடம் முறையிட்ட வகையில் – விண்ணப்பம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

புளியேப்பக் காரனும் பசியேப்பக் காரனும்!

தன்னாட்சி வந்தவுடனே – இந்நாட்டில் உள்ள கோடிக்கணக் கான ஏழைகளை யெல்லாம் செல்வர்களாக்குவோம் (அவர் மொழியில் சொன்னால்: 'தரித்திர நாராயணர்களை யெல்லாம் குபேர நாராயணர் களாக்குவோம்') என்ற காந்தியாரின் போலி உரைகளெல்லாம் அறவே கைவிடப்பட்டு – பிற இனத்தவரான நம்மனோரில் கோடிக் கணக்கான பேர்கள், இன்றும், எச்சிலை பொறுக்கிகளாகவும், ஒன்றி ஒதுக்கிடங்களிலும், சாய்க்கடை ஓரங்களிலும் வாழ்க்கை நடத்து

பவர்களாகவும் இருப்பது நாள்தோறும் காணும் நெஞ்சு பொறுக்காக் காட்சி யில்லையா? பிராமணன் எவனேனும் எச்சிலை பொறுக்குகிறானோ? எச்சிலை கிடக்கட்டும். இரந்தாவது உண்கின்றானா? இரந்தாலும், மாடு, நிலம், பொன், (கோதணம். பூதானம், சுவர்ணதானம்) என்றெல்லவா பெருமையுடன் ஏமாற்றிப் பெற்று வருகின்றான். நம்மனோர் இருக்க இடமற்றவர்களாக இப்படி நாள்தோறும் இரந்து குடிக்கையில், பழச் சாறும், பனிக்குழைவும், பழத்திரட்டும், அரச விருந்துகளுமாக உண்டு கொழுப்பதுடன், பட்டிலும், சல்லாவிலுமான ஆடை அணிகள் பூண்டு குடும்பம் குடும்பமாகக் கூடி மகிழும் பிராமணர்கள் பலர், இராசாசியைக் குறைகூறும் நிலையில் சலசலப்புக் காட்டிக் கொண்டு – இராசாசி சொன்னதால்தான் தி. மு க. வுக்கு ஒப்போலை போட்டதாகவும் – தாங்கள்தாம் தி. மு க. வை அதிகாரத்திற்குக் கொண்டு வந்ததாகவும் – அப்படியிருந்தும் அண்ணாத்துரை எதற் கெடுத்தாலும், இராசாசியை மறந்து, ஈ. வே. இரா. பெரியாரைக் கருத் துக் கேட்கிறார் என்றும், இதனால் பிராமண இனமே துன்பத்திற் குள்ளாயிற்றென்றும் குற்றம் சாட்டிவிட்டு – உலகத்தின் எட்டாவது வியப்பு எனும்படி, ''பிராமண இனத்துக்கு உதவியாக நீங்கள், (அஃதாவது இராசாசி) என்றுமே இருந்ததில்லை'' எனும் முன்னுக் குப்பின் முரணான பழியையும் – நேருவுக்கு அடுத்தபடியாகப் பிரா மணப் புரவலராக இருந்து வந்திருக்கிற இராசாசி மேல் குற்றம் சுமத்திக் – கடவுளையும் துணைக் கழைத்திருக்கிறார்கள் பிராமண நிலத் தேவர்கள் – சென்னை டி. என். இராமச்சந்திரன் வாயிலாக. எப்படி? 100க்கு 3 பேராகவுள்ள இச்சுண்டைக்காய் இனத்தின் திறமை! தி. மு. கவை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்களே இவர்கள்தானாமே! அடி சக்கை! அப்பொழுது 100-க்கு 97 பேரான 'பிறர்' எல்லாரும் திண்ணை தூங்கி மரக்கட்டைகளா என்ன? கோழி கூவா விட்டால் பொழுது விடியாதாமே!

திருடனே, 'திருடனைப் பிடி' என்று பொய்க்குரல் கொடுத்து – ஏதாவது சந்து பொந்தில் ஓடி ஒளிந்து தப்பித்துக் கொள்ளுவது போல், இந்த அரசியல் கொள்ளைக்காரரான இராசாசி – எப்பொழுதும் போல் சமய, அரசியல், பொருளியல், குமுகாயத் துறைகளில், நம்ம னோரை எப்பொழும் போல் கொத்தடிமைகளாக்கப் போலிக்கட்சி நிறுவிப் போலி நாடகம் நடத்திக் கொண்டு வருகிறாரென்பது 'ஆரிய மாயை' எழுதிய அண்ணாத்துரைக்குத் தெரியாதா?

'நசூத்ராய மதிம் தத்யாத்' – பொருள்: சூத்திரர்களுக்கு (அஃதாவது டி. என். இராமச்சந்திரனின் மொழியில் சொல்ல வேண்டுமானல் ''பிற இனங்களுக்கு'') படிக்க வாய்ப்பளிக்காதே என்றும், 'சூத்ரஃக வேசி புத்ரஃக') பொருள்: சூத்திரர்களெல்லாரும் விலைமகள் மக்கள்) என்றும் (அஃதாவது, 1957–இல் வாய் கொழுத்த 'Nonsence' நேருவைக் கண்டிப்பதற்காக, 50,000 கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை தி. மு. க. நடத்திக் காட்டிய பொழுது, நேருவின் சினத் தீ கலந்த மொழியில் சொல்ல வேண்டுமானல் (Degenerates of Madras) – 'தமிழ்நாட்டு இழி பிறவிகள்') என்றும், நாமாகிய 'பிற இனங்களை' அஃதாவது, திரவிடர்களை – அஃதாவது இந்நாட்டுப் பழங்குடி மக்களின் வழித்தோன்றல்களாகிய நம்மை, ஆரிய நாடோடிகள் எழுதி வைத்திருப்பதுடன், அன்று தொட்டு இன்று வரை, பழக்க வழக்கப் பண்பாடுகளிலும் புகுத்தி, அவற்றிற் கெல்லாம் புதிய அடையாளமிடும் வகையில் – பண்டைக் காலப் புகழ் வாய்ந்த இந்தியப் பண்பாடும் (Culture) வரலாறுமென்று பசப்பிப் பசப்பியே – உண்மையில் இந்நாட்டைப் பாழாக்கிய – பார்ப்பன இன நலன்களைக் காப்பாற்றிவிட்டுச் சென்ற நேருவின் சொற்படி, எழுதப்பெற்ற தற்கொலை அரசியல் சட்டம், இப்பார்ப்பனர்களுக்கு இதுவரை யாதொரு தண்டனையும் கொடுக்காமலிருப்பது என்ன அறமோ? நெறிமுறையோ? நம்மனோர்க்கு இவ்வளவு மதர்மதர்ப்பா – மந்தமதியா?-இந்த 1967 வரைகூட? நம்மைத் தாழ்த்திய இவர்களுக்கு எத்தகைய தண்டனை தர வேண்டும் தெரியுமா? எனக்குத் தெரிந்த வரையில் இந்நாட்டின் பழைய பழங்குடி மக்கள் இது வரையில் செய்து வந்து கொண்டிருக்கும் எல்லா வகை இழிவான அலுவல்களையும் செய்யும்படி ஆரியர்களை அமர்த்தியும், ஆரியர் செய்து வந்து கொண்டிருக்கிற எல்லா உயர்தர அலுவல்களிலும் அந்தத் தமிழர்களை அமர்த்தியும், சட்ட திட்ட ஏற்பாடுகள் செய்தால்தான் 'வாய்மையே வெல்லும், – 'சத்யமேவ செயதே' என்ற சொற்களுக்கும் பொருள் கிடைக்கும்; இப்பார்ப்பனப் பழிகாரர்களுக்கும். நெடுங்காலத்திற்கு முன்பே கிடைத்திருக்க வேண்டிய வரலாற்றுத் தண்டனையும் கிடைத்து விட்டதாகவே கருதப்படும்.

இத்தகைய நம்மனோரின் எரிமலைக் குமுறல்களை – அக்கால ஒப்புரவுக் கட்சி, கக்கிக் கொண்டு எழுந்த வேகத்தைக் கண்டுதான் – இந்நாட்டுப் பார்ப்பனப் பெரு நரிகளான வடநாட்டு பார்ப்பன

நேருவும், அவரின் தென்னாட்டுப் பதிப்பான இராசாசியும், போடாத நாட்டுப் பற்றுப் புனைவெல்லாம் போட்டு, ஆடாத ஈக (தியாக) ஆட்டமெல்லாம் ஆடி, இந்நாட்டு விடுதலை அரசியல் தலைமையையும் ஆட்சித் தலைமையையும் தங்கள் கைகளிலேயே உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாயிருந்து வந்திருக்கிறார்கள். இந்தப் பார்ப்பன சூழ்ச்சி – நம் மந்தமதியில் நுழைய எத்தனை நூற்றாண்டுகளாகுமோ – நாம் அறியோம்.

நம் பெண்டிரின் காது, மூக்கு முதலிய உறுப்புகளை அறுத்தெறிந்த ஆரிய அரம்பமாக்களை தேவஇறக்க(அவதார)ங்கள் என்றும், அத்தகைய – இழிஞனின் மனைவியைச் சிறைப்பித்துச் சென்று பழி வாங்கிய தூய மறவனை அரக்கன் என்றும், இன்றும் சொல்லும் – கருத்திருமன், பக்தவத்சலம், அளகேசன் போன்ற ‘சூத்திர’ப் பட்டமேந்திகள் காட்சிதரும் பொழுது, நம் மக்களின் மந்தமதியின் தடிப்பும் மதர்மதர்ப்பும் எவ்வளவின என்பது புரியுமன்றோ? அவனவன் உடன் பிறப்புகளுக்கு அப்படியோர் உறுப்பறுக்கும் இழிவு நேர்ந்திருந்தாலன்றோ அவ்விழிவின் தன்மை புரியும்.

‘இந்தியரெல்லாரும் ஒரே படியாகச் சிறுநீர் கழித்தால் அந்த வெள்ளம் வெள்ளையனை வெளியேற்றிக் கொண்டு போய்விடு மென்பார் அக்காலப் பார்ப்பன அண்டப் புளுகர் சத்தியமூர்த்தி சாத்திரிகள்! அப்படியானால் ஆரியரல்லாத பிற இனங்கள் – ஒரே படியாகக் காரித் துப்பினால், இவ்வாரியக் காட்டு மிராண்டிகள் அவ்வெள்ளப் பெருக்கில் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்து போய் விடாரா என்ன?

**இறுதியில் ஓர் ஆறுதல்:** இந்நாட்டுப் பேரான்மாக்களும், மாந்தருள் மாணிக்கங்களும் – வெறும் தஞ்சாவூர்ப் பாவைகள்தாமென்பதற்கு – 15இல் 9 மாநிலங்களில் அவ்விரு ‘பெரியவர்களும்’ வளர்த்த பேராயக் கட்சியின் செல்வாக்கு இவ்வளவு விரைவில் – 20 ஆண்டுக்குள்ளாகவே சரிந்து கொண்டிருப்பதே சான்று. எவ்வளவுதான் மக்களை அறியாமையில் ஆழ்த்தி வைக்கப்பட்டிருந்தாலும் – எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பதை டி. என். இராமச்சந்திரன் போன்றவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

O

# எதையும் விற்போர்!

—புலவர். தி. நா. அறிவுஒளி—

கயவர்க்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவப் பெருந்தகை,

''எற்றிற் குரியர் கயவர்?ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து''

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அண்மையில் தமிழக அரசினர் மொழிச்சிக்கலில் ஒரு நல்ல திருத்தத்தை உறுதி செய்து ஆணையனுப்பியுள்ளனர். 'இந்தி மொழிக்கு மாருகச் சிறப்புத் தமிழையும் எடுத்து மாணுக்கர் கற்கலாம்' என்ற் ஆணை மிகப் பாராட்டத்தக்க மனமலர்ச்சியைக் காட்டும் உரிமையாவணமாகும். இம்மாண்பார் நடவடிக்கையை உறுதியோடு செய்த தமிழக அரசினரையும், அமைச்சர் குழுவையும் முதலமைச்சர் திருமிகு அண்ணுத்துரையார் அவர்களையும், சட்டமன்ற உறுப்பினர் களையும் நாமும் மற்ற தமிழன்பர்களோடு நனி பெரிதும் பாராட்டிப் போற்றுகிறேம். மக்களுக்கும் தமிழக மாணுக்கருக்கும் பெரு மகிழ்ச்சியும் விருப்பமும் நல்கும் இம் மாறுதலை 'ஒரு கூட்டம்' எதிர்த் திருக்கிறது. இதில் வியப்பேதுமில்லை? நல்லதைத் தீயதென்றுரைக்க எக்காலத்தும் ஒரு கூட்டம் இருப்பதியல்பே. ஆயின், இங்குள்ள நரியர் தம் கள்ளச் சூழ்ச்சியினுல் நாட்டுக்கோ, அரசினர்க்கோ, தமிழினத் துக்கோ தீங்கு நேரும் நிலைவருதல் ஆகாது என்று எச்சரிக்க விழை கிறேன்.

தமிழக இந்தி ஆசிரியர்களும், தமிழகத்திலுள்ள இந்தி வெறி யரும், வடபுல இந்திப் பேயரும் தமிழக அரசின் சீரிய நேரிய தீவிர நன்முறைத் திட்டத்தை எதிர்த்திருப்பதோடு, அதைத்திரும்பப் பெற வேண்டுமென்றும் அச்சுறுத்த முற்பட்டிருக்கின்றனர். இவ்விழி நிலைக்கு இடங்கொடுத்தால், மீண்டும் இந்தித் திணிப்பெதிர்ப்புக் கிளர்ச்சி தமிழகத்தில் மிக அச்சந்தரத்தக்க வகையிலே ஓங்கிச்சுடர் விடும்! நாட்டின் அமைதியை நனி நாடும் நல்ல மனத்தினர் இனியோர் இந்தி எதிர்ப்புப் போரை விரும்பார் என்பது உறுதியே. ஆனுல் எதையும் விற்கும் கயவரின் சூழ்ச்சி வெற்றி பெறுமானுல், இந்தி எதிர்ப்புப் பெரும் போர் மூண்டெழுவதை யாராலும் தவிர்க்க முடியாது!

இந்தியாசிரியர்கள் தம் பிழைப்பு வீழ்ந்துபடுமே என்ற அடி வயிற்றுக் கவலையால் தமிழகத்தை மொழி வெறிக்கே அடிமையாக்க முனைவது ஏழேழ் அளறில் ஆழ்த்தும் இழி செயலாகும். அரசினர் இந்தி ஆசிரியர்களைப் பணியிலிருந்து இதுகாறும் நீக்கவில்லை; நீக்கி விட வேண்டுமென்ற கருத்தும் கொண்டிலை. வறிதாகப் பொது மக்களிடை ஒரு பொய்ப் பழியைத் தூண்டிவிடுவதும், இதனைச் செய்தித் தாள்களில் பெரிய அளவில் விளம்பரப் படுத்துவதும் கயமையுட் கயமையேயாகும்.

தமிழினத்தின் நலனையும், தமிழுரிமையின் வலிமையையும், தமிழ்ப் பண்பாட்டின் உயர்வையும் காக்க வேண்டுமாயின் தமிழக அரசு 'இந்தி அல்லது சிறப்புத்தமிழ்' என்ற ஆணையைத் திரும்பப் பெறலாகாது. தமிழாசிரியப் பெருமக்களும், பேராசிரியப் பெருந்தகையினரும், தமிழ் மாணுக்கரும், தமிழறிஞர் பெருமக்களும் தமிழக அரசினர்க்கு உறுதுணையாக வலிமையாக உள்ளனர். நம்மனையோர் உறுதியாகத் தமிழக அரசு தன் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி மடல் விடுக்க வேண்டும். இந்தி எதிர்ப்பின் காரணமாக உயிர் நீத்த தமிழ்த்துறவினர் பெயரால் - இந்திப் போர் அடியாகச் சிறை சென்ற தூயவர்தம் பெயரால் இந்தி எதிர்ப்பாளர் தம மனச்சான்றின் பெயரால் - நற்றமிழ்க் காதல் நனி பொங்கும் நல்லோர் உயிர் மூச்சின் பெயரால் இவ்வேண்டுகோளைத் தமிழக அரசினர்க்கு இன்னே திட்பமாக உரைப்போம்!

மும்மொழித் திட்டத்துக்கு இவ்வாணை மாறுபட்டதென முன்னுள் அமைச்சர் ஒருவர் உளறியது பெருவியப்பாக இருக்கிறது எந்தப்பள்ளியிலும் மூன்றும் மொழியாக இந்தி மட்டுமே பயில வாய்ப்பமைத்த அறவோர் இவரல்லரா? 'ஏதாவது ஓர் இந்திய மொழியில் ஏதாவது ஒரு பள்ளியிலேனும் ஏற்பாடு செய்தாரா? எத்தனைப் பள்ளிகளில் மலையாளமோ, தெலுங்கோ, கன்னடமோ, வங்காளியோ, மராட்டியமோ கற்பிக்க ஆவன செய்துள்ளனர்? 'ஏதாவது இந்திய மொழி' என்ற பெயரின் 'இந்தி' ஒன்றைத் தானே கட்டாயமாகத் திணித் திருந்தனர்? இந்தக் கயமைக்கு ஈடான கயமை உலகில் ஏது? பேராயக் கட்சியினர் தமிழ்ப் பகைவராக மாறினுல் தமிழ்நாட்டில் அழுக்கடைவதோடு செல்லாக் காசுகளாகவும் மாறும் நிலையடையும் என்பதை அன்னுர் பாலமைந்த நல்லருளால் கூறிக்கொள்ள விழைகிறேன். ஆகவே, தமிழக அரசினரின் ஆணை, 'மும்மொழிக் கொள்கைக்கு' முரணுனதுமன்று; இந்தியை முழு அளவில் விரட்டி ஓட்டி விடுவது மன்று!

இந்தி வெறியரின் மெய்யுருவம் அம்பலமாகத் தொடங்கி விட்டது. தமிழ் காப்பவர்கள், தமிழ்த் தொண்டர்கள், தமிழ்ப் புலவோர்கள் விழித்துக் கொள்ள வேண்டும். இந்திப் பேயரின் எதிர்ப்பு என்ற நச்சு வேலைகளைத் துகள் துகளாக்க ஆவன செய்ய வேண்டும். இந்திப் பரப்புக் கழகம் தமிழக எல்லையில் இனி இருத்தலாகாது. தமிழ்ச் சான்ருேர் இந்தி பரப்புப் பணியிலீடுபட்டுள்ள அமைப்புகளின முன் போராட்டம், மறியல் போல்வன செய்வதோடும், வடபுல இந்தி வெறியர் தமிழகம் வரும் போது கருப்புக் கொடி காட்டி எதிர்ப்புக் காட்ட ஆவன புரிதலும் இனனே இன்றியமையாததாகும். தமிழ காக்கும் தொண்டர்க்கு இனியே மெய்ப்பணிகள் காத்துள்ளன. 'எதையும் விற்கும் வயிற்றுப் பெருமான்களாகிய' இந்தியடியார்களின் புன்மைப் பூசல்களுக்கு நற்றமிழர் சீர் குலையாதிருக்க வேண்டுமென்பதோடு, பிறமொழிப் பித்தர் உடனே திருந்தி நல்லோராக வேண்டுமென்றும் அன்பால் வேண்டி எச்சரிக்கிறோம்!

# குழுகாயம்

நா. தமிழடியான். அனகாபுத்தூர்.

வாழ்க்கை யுயர்ந்ததாச் சொல்வீர்—தன்
மான மழிந்ததோ அழிந்ததோ வாழ்க்கை?
கீழ்மை யொழிந்ததாச் சொல்வீர்—குணக்
கேடுதான் மேன்மையே மேன்மையே போலும்?
தாழ்மையும் வாய்மையும் இல்லை—நாளுஞ்
சண்டைகள் செய்வதோ செய்வதோ வாழ்க்கை?
ஏழ்மை தொலைந்திட வில்லை—இன்(று)
இருப்பது பொய்க்குழு காயமே கண்டீர்!

நம்முள் தமிழ்ப்பெய ரில்லை—தமிழ்
நாட்டவர் யாவரும் தமிழராய் இல்லை!
தம்மை யுணர்ந்தவர் சொல்லை—தனித்
தமிழை யுணர்த்துவோர் வரைந்திடும் சொல்லை-
நம்பி நடப்பது மில்லை—தமிழ்
நாடு விழிப்பதும் விழிப்பதும் இல்லை.
வம்பர் சழக்கர்கள் யாரும்—நம்மை
வாழ விடுவதும் இனியென்றும் இல்லை.

ஊர்கள் செழிப்பது மில்லை—என்றும்
உண்மை சிறப்பதும் வெல்வதும் இல்லை.
சேர்ந்து செயல்படல் இல்லை—ஒரு
செம்மை நிலைபெற் றுயர்வதும் இல்லை.
ஆர்த்தல் குறைந்தது மில்லை—அதால்
ஆன பயனெதும் விளைவதும் இல்லை!
பார்ப்பவர் மெச்சுவ தில்லை—நம்
பண்பை அழித்தபின் வாழ்வெதும் இல்லை.

சொல்லுக்குச் சொல்லெங்கு முண்டு—அதைச்
சொல்வதால் என்பயன் என்பயன் கண்டீர்?
சொல்லுவ தொருசொல்லே வேண்டும்—அதைத்
தொடர்ந்து நடப்பவர் பலரிங்கு வேண்டும்.
தொல்லை 'அளவை'கள் வேண்டா—ஒரு
தூயவர் சொல்லையே மேற்கொள்ளல் வேண்டும்!
இல்லை மறுப்பதற் கில்லை—நம்
இனநலம் மொழிநலம் வாய்ந்தவர் சொல்லை! O

# விலங்கியல் மொழி

English: Harry Miller F. Z. S. தமிழ்: ந முத்துக்குமரன் (அறி. இ., ஆ. ப.,)

இந்தியா தன் மொழிச் சிக்கலைத் தீர்க்க முடியாமல் துன்புறலாம்; ஆனால் விலங்கியலார் இச்சிக்கலை வெகு காலத்திற்கு முன்பே தீர்த்துக் கொண்டனர். 'அடுத்தவர் என்ன பேசுகிறார்?' என்பதைப் புரிந்து கொள்வது ஒரு சிக்கலான கேள்வி.

அறிவியலுக்குத் தெரிந்த ஒவ்வொரு விலங்குக்கும் பயிரினத் துக்கும் பொது நிலை மாந்தன் வியக்கும் படியான நீண்ட இலத்தீன் பெயர்கள் உள. கூரையின் மூலையிலிருக்கும் எட்டுக்கால் பூச்சியைச் 'சிலந்தி' என்றால் எல்லாருக்கும் தெரியும் போது, நான் அதை செகஃச்ட்ரியா சினகுலேட்டி சானி (Segestria senoculate johni) என்றழைக்கின்றேன். தென்னையைப் பாழ்படுத்தும் அச்சிறு விலங்கை மரநாய் என்றால் எல்லாருக்கும் புரியும்போது, நான் மட்டும் ஏன் பாரடாக் சூரசு எர்மாப் ராடைட்டசு (Paradoxurus hermophroditus) என்று பெயரிட வேண்டும்?

பொதுவாகப் பார்த்தால், இவ்வறிவியல் பெயரீட்டு முறை மிகக் கடினமானதாகத் தோன்றும். என்றாலும் இது மிகத் தேவையா கின்றது. உனக்கு வேண்டுவது ஒரு துண்டுப் பன்றிக்கறி. அதை விட்டு அவனிடம் போய் சுசுக் ரோபா டொமச் டிகசு (Susserofa domesticus) வேண்டுமென்று கேட்பதில் பொருளில்லை. எல்லா ருக்கும் எலி என்றால் புரியும் போது ரேட்டசு நாவர்ச்சி கசை (Ratus novergicus) ஒழிக்க வேண்டுமென்று கத்தினால் யாருக்குப் புரியும்.

குழப்பம்: பெரு வழக்காக உள்ள பெயர்களால் பெருங்குழப்பம் ஏற்படுகின்றது. இதை நீக்குவதற்கே அறிவியலார் தனி வகையான பெயரீட்டு முறையைப் பின் பற்றுகின்றனர். இவ்வாறு எல்லா உயிர்களும் பகுத்தறிவு முறையில் செவ்வனே வகைப்படுத்தப்பட்டி ருக்கின்றது (Classification). ஒவ்வோர் ஆராய்ச்சியிலும் தெளிவு பெறுவதற்கு இவ்வகைப்பாடு மிக இன்றியமையாததாகும்.

காட்டாக யானைக்கும் அரிமாவுக்கும் மடங்கலுக்கும், கயலுக்கும் மீனுக்கும் குதிரைக்கும் புரவிக்கும் உள்ள வேற்றுமை என்ன? ஒன்று மில்லை! ஏனெனில் அவை ஒரே விலங்கின் வெவ்வேறு பெயர்கள். நீ உனக்குப் புரிந்தவாறு சொல்லிக் கொள்கின்றாய். அவ்வளவே.

இவ்வாறு எல்லா விலங்குகளுக்கும் பல பெயர்கள் வழங்குகின்றன. அது மட்டுமா? ஒரே விலங்கு ஓரிடத்தில் ஒரு பெயரிலும் பிரிதோர் இடத்தில் வேறு பெயரிலும் அழைக்கப்படுகின்றது. இந்தப் பெயர்களை உலகிலுள்ள மொழிகளின் எண்ணிக்கையால் பெருக்கிப் பாருங்கள். ஓர் இனத்துக்கு மட்டும் நூற்றுக் கணக்கான பெயர்களிருக்கும்.

குழப்பம் அஃதொடு நிற்றுற் பிழையில்லை தன்னைச் சுற்றியுள்ள விலங்குகளை மேற்போக்காகப் பார்க்கும் ஒருவன் அவற்றின் புறத்தோற்றத்தைக் கண்டு தவறாகக் கருதிவிட இடமுண்டு. கடலில் நீந்துவனவெல்லாம் மீன்களென்றும், பறப்பன வெல்லாம் பறவைகளென்றும் நினைக்கின்றார்கள். வெங்குருதிப் பாலூட்டிகளிற் (Warm blooded Mammals) சில நீந்தவும், பறக்கவும் இயலும் என்பது தெரியாவிட்டால் திமிங்கலத்தை மீனென்றும் வௌவாலைப் பறவையென்றும் தவறாகக் கருதி விடுவான்.

எளிய பொது மக்களிடம் மரபு வழக்குகளால் ஏற்படும் குழப்பம் இன்னும் மிகுதியாகின்றது. மூஞ்சுருவும் சுண்டெலியும் ஒன்று போலத் தோன்றினாலும் மிகுந்த வேறு பாடுடையவை எனப்புரிய வைத்தல் எளிதன்று. பெரும்பாலான இந்திய நாட்டுப்புற மக்கள் சாரைப்பாம்பு ஆணென்றும், நாகப்பாம்பு பெண்ணென்றும் உறுதியாக நம்பிக் கொண்டிருக்கின்றனர். (ஒரு நாள் நான் சாரைப்பாம்பை அறுத்துக் கொண்டிருக்கும் என் கையாள் அரசு வாயடைத்து நின்று விட்டான்).

வகைப் படுத்தலில் உள்ள சிக்கல்களை ஒருங்கு படுத்தியவர் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவிடிப் பயிரியலார் **காரல்வான் லின்னி** (லின்னேயசு). (Carl von Linne, Linnaeus) அவர் கண்டு பிடித்த வகைப்பாட்டு முறை (Classification) அவர் பெயரிலேயே வழங்கி வருகின்றது. பல மாற்றங்களுக்குட்பட்டாலும் இன்றும் உலகம் முழுவதும் அம் முறையையே பின் பற்றப்படுகின்றது.

உலகில் உள்ள உயிரிகள் முதலில் பயிரினம் விலங்கினம் என் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். விலங்குகள் முது கெலும்புள்ளன, முதுகெலும்பில்லாதன என மேலும் இரண்டாகப் பிரிக்கப்

படும். முதுகெலும்பில்லாதன பல இனத் தொகுதிகளாகவும் (Phylum) இனத் தொகுதிகள் பல வகுப்புகளாகவும், வகுப்புகள் பல பேரினங்களாகவும் (Genus), பேரினங்கள் பல இனங்களாகவும் (Species) பிரிக்கப்படும். இவற்றுள் பேரினமும் இனமும் தலைமை யானவை. இலத்தீன் மொழியிலுள்ள முதற்சொல் பேரினத்தையும், இரண்டாம் சொல் இனத்தையும் குறிக்கும். சில கால் மூன்றாவது சொல் இருப்பது முண்டு. அது துணையினத்தைக் (Sub-species) குறிக்கும்.

காட்டாக அரிமா(சிங்கம்) பாந்திரா லிபொ என்றும், புலி பாந்திரா டைக்ரிசு என்றும் அழைக்கப்படும். இவை வெவ்வேறினங் களென்றாலும் பாந்திரா என்ற ஒரே பேரினத்தைச் சேர்ந்தவை என்பது தெரிகின்றது. அறிவியலுக்குத் தெரிந்த எல்லா உயிர்களும் மறைந்து போன வழக்காறற்ற உயிர்கள்கூட இவ்வாறு நேர்த்தியாக வகைப்படுத்தப் படுகின்றன. எல்லாம் என்று சொல்லிவிட முடியாது; ஏனெனில் சிலவற்றை எந்த இனத்தில் சேர்ப்பது என்ப தில் அறிவியலார்க்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

இது வரை அறியப்படாத புதிய விலங்கோ பயிரினமோ கண்டு பிடிக்கப்பட்டால் அதன் புதுப்பெயர் அனைத்து நாட்டுக் குழுவின் (International Committy) முன் வைக்கப்படுகின்றது. அவர்கள் ஆய்ந்து பொருத்தமா இல்லையா என்ற கடைசி முடிவு எடுப்பர். இவ்வறிவியற் பெயரிடும் துறையில் இடைவிடா ஆராய்ச் சிக்கும் திருத்தத்திற்கும் அவர்களே முழுப் பொறுப்பு.

இக்குழுவின் முடிவை உலகிலுள்ள எல்லா நாட்டறிஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். அரசியல், சமயத்தலைவர்களைப் போன்று பூசல் கிடையாது. அறிஞர்கள் எப்படி ஒன்றி இயங்குகின்றனர் என்பதற்கு இஃதொரு சரியான சான்று.

**ஏனிந்த இலத்தீன்?:** அடுத்த கேள்வி ஏனிந்த இலத்தீன்? செத்த மொழியைப் பயன்படுத்தி யாருக்கும் எளிதில் புரியாமற் செய்ய வேண்டுமென்பது அறிஞர்கள் விருப்பமா? இதற்கு விடை காண வேண்டுமென்றால் ஐரோப்பாவின் இடைக்கால நிலையை அறிதல் வேண்டும்.

அக்காலத்தில் கிறித்துவ சமய குரவர்களோ அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களோதாம் இயற்கையை ஆய்ந்தனர். அவர்கள் "மெய்யறிவாளர்" (Philosopher) என்றழைக்கப்பட்டனர்.

அக்காலத்தில் மேற்கு ஐரோப்பாவிலேயே உரோமன் நகரில்தான் ஒரே யொரு கிறித்தவக் கோயில் இருந்தது. அச்சமய குரவர்கள். உரோமானிய மொழியை, அஃதாவது இலத்தீனைப் பயன்படுத்தினர் அது மட்டு மன்று; அவர்களின் பொத்தகங்கள் மக்களுக்குப் புரியாத ஒரு மொழியில் இருக்க வேண்டுமென்று அவர்கள் எண்ணினர். இவ்வாறு புரியாத மொழியில் எழுதினால்தான் மக்களுடைய கேள்விக் கணைகளிலிருந்து தப்ப முடியும். ஆனால் இயற்கை பற்றிய பொத்தகங்கள் இவை தவிர வேறில்லை.

ஆதலால் பின்னர் வந்த இயற்கை பற்றிய எல்லாப் பொத்தகங்களும் இலத்தீனிலேயே எழுதப்படலாயின. மறுமலர்ச்சிக்குப் (Renaissance) பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பிற மொழிகளில் எழுதுவது மதிப்புக் குறைவு எனக் கருதப்பட்டது.

இன்றைய அறிஞர்களும் இம்மரபையே ஏற்றுக் கொண்டனர். எல்லார்க்கும் புரியக்கூடிய ஒரு பொது மொழி ஏந்தாக (வசதியாக) இருத்தலை உணர்ந்தனர். இன்று அறிஞர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே எழுதுகின்றனர். அல்லது ஆங்கிலத்தில் எழுதியிருப்பதைப் புரிந்துகொள்கின்றனர் (இதை இந்தி வெறியர் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை). ஆனால் பெயரிடுவதற்கு இலத்தீனே ஏந்தாக (வசதியாக) இருக்கின்றது.

நீங்களும் நானும் முள்ளெலியை, முளளெலி என்றே அழைத்துக் கொள்ளலாம். ஆனால் அறிவியல் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முள்ளெலியை முசுகார் டினசு அவெல்லனேரியசு (Muscardinus avellanarius). என்றால் ஏற்றுத்தான் ஆக வேண்டும். O

## அன்பளிப்புக்கு நன்றி.

சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களும் 'தென்மொழி' அன்பர்களுமாகிய திரு. பொ. குருசாமி, திரு. சா. க. பழனிசாமி அவர்கள் 'தென்மொழி' வளர்ச்சிக்காக உருபா 8. விடுத்துள்ளார்கள். அன்னார் தம் மொழி ஊக்கமும் உணர்வும்கொண்ட உளத்திற்கு நன்றி. (ஆ-ர்.)

# காப்பது கடனன்றோ?

– தரங்கை-பன்னீர்ச்செல்வன்.

இற்றை நாட்களில் அரசியல் அரங்கில் மேனிலையிலிருப்போரின் முதலீடே பேச்சுத்தமிழ்தான் எனில் அது மிகைக் கூற்றன்று. காரணம் மக்களாட்சியின் மாண்பு, பேசிப்பேசி மக்களைக் கவர்வதையே உயிர்த்துடிப்பாகக் கொண்டிலங்குகின்றது. நாடாளும் உரிமையை நல்கும் பொதுமக்களும் கருத்துரிமையை - தம் உளம் ஒப்பிய பேச்சு உரிமையையே ஒப்போலை (Vote) வழி வழங்குகின்றனர். இவ்வாறு மக்களின் மனத்தை மாற்றுதற்காகப் பேசப்பெறும் பேச்சுகளின் தகுதி இக்கால் வெகுவாகக் குறைந்துகொண்டே வருகின்றது. நல்ல தமிழில் பேசவும் எழுதவும் நாட்டமற்றவரோர் நாடாளும் பணிக்குப் போட்டியிடுவதாற்றான் நிலைதிரிந்த - பிழை மலிந்த - கொச்சைத் தமிழ் (Collogulal form of Thamizh) மேடைகளில் கொஞ்சி விளையாடுகின்றது. இந்நிலை தொடரல் தமிழின் வளர்ச்சிக்குத் தளர்ச்சியூட்டும் என்பதில் மிகச் சிறிதளவும் ஐயுறல் வேண்டா.

இக்கெடுமலி கொடுநிலைக்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, நல்ல தமிழில் இலக்கணத்திருத்தமுடனும், இலக்கியச் செறிவுடனும் பேசும் ஆற்றலின்மை. மற்றொன்று, பொதுமக்களின்

பேச்சுத் தமிழில் - இலக்கண வரம்பு திரிந்த தமிழில் பேசினுற்றான் மக்கள் மனத்தில் ஆழப்பதியும் என்னும் பிழைபட்ட கொள்கை. உண்மையில், முதற் காரணத்திற்கு உரியவர்களே இற்றை அரசியலில் மிகுதி. எனினும், தம் தகவுக் குறைவை மறைப்பதற்காக இரண்டாவது காரணத்தைக் காட்டித் தப்பித்துக்கொள்கின்றனர். இப் பேச்சாளர்களுடைய குறைபாட்டால், போதுமான படிப்பறிவற்ற பொதுமக்களும் பிழைசெறிந்த பேச்சுகளையே தொடர்ந்து பின்பற்றுகின்றனர். அன்றியும், நல்ல தமிழில் திருத்தமுடன் பேசுவாராயின், அவரை இகழ்ந்தும், வெறுத்தும் ஒதுக்குகின்றனர். எனவே, தமிழ் மொழி வளர்ச்சியில் மெய்யாகவே வேட்கையுடையோர் எவரும் மேடையேறிக் கொச்சைத் தமிழில் கொள்கை விளக்கஞ் செய்தல் கூடாது.

அரசியல் அரங்குக்கு அடுத்து நிலையில் வானொலி நாடக, திரையரங்குகளில் புழங்கும் உரையாடல்களே பேச்சுத்தமிழைக் குலைக்கின்றன. பெரும்பாலான உரையாடல்கள் கொச்சைத்தமிழில் எழுதப்படுகின்றன. அரசியல் மேடைகளைவிட இக்கூத்து மேடைகளே மிகுதியாகத் தமிழைக் கெடுக்கின்றன. இதற்கும் மேற்சொன்னதுபோல் பல காரணங்கள் காட்டப்படலாம். எவ்வதுரைப்பினும் அறியாமையும், தமிழ்ப் பற்றின்மையுமே தலைக் காரணங்களாகும் என்பது மறுக்கவொண்ணாதது. இத்தகு கொள்கையிலார் கணக்கின்றி வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் புகுத்தி வருகின்றனர். இதனால், புலவர் தமிழ் வேறு, பொதுமக்கள் தமிழ் வேறு என்ற நிலை எளிதில் பரவி வருகின்றது. இதனால் நற்றமிழில் பேசும் புலமை சான்றவர்கள் ஏதோ ஒருவகைத் தனிப்பிறவிகளாகக் கருதப்படுகின்றனர்.

தமிழர்களாயினோர் நல்ல தமிழில் நான்கு வரிகள்கூட எழுத முடியாத இழி நிலையில் இருப்பதோடு - நல்ல தமிழில் எழுதப்பட்ட நான்கு வரிகளைகூடப் படிக்கத் தெரியாத பழி நிலையில் இருப்பதும் நல்ல தமிழில் நான்கு தொடர்கள்கூட பேசவியலாத அழிநிலையில் இருப்பதும் மிகமிக வெட்கக்கேடானது. இக்கெடுநிலையை மாற்றியே ஆகல்வேண்டும்.

நம் நாட்டுப் பேச்சாளர்களும் நாடகாசிரியர்களும் மட்டுமே கொச்சை மொழியை அச்சமின்றி ஆள்கின்றனரே யல்லாது, அயல் நாட்டார் எவரும் கொச்சைமொழிப் பேச்சாளர் (Orater of Collogiual

Language) என்னும் பெருமை பெற்றதாக இதுகாறும் கேட்டோ மில்லை. இந்நிலையை மாற்றவேண்டிய தமிழ்ப் புலவர்கள் தமது பேச்சுக்கும் எழுத்துக்கும் தனித்தன்மை இருத்தல்வேண்டும் என்பதற்காகவோ, என்னவோ இலக்கணம் அமைந்த பேச்சாற்றலைத் தம்மோடு நிறுத்திக்கொண்டு, பிற பேச்சாளரின் புல்லாண்மை மொழிக்கொலையில் கருத்தைச் செலுத்தித் தடுக்காமல் வாளாவிருக்கின்றனர்.

மக்களின் பேச்சுமொழிதான் இலக்கிய மொழி. அவ்விலக்கிய மொழியே பின்னர் இலக்கணம் பெற்றுச் செம்மையுறுகின்றது. இலக்கணம் என்ற திட்டவட்டமான உயர்கட்ட வரம்பை வகுத்துக் கொண்டபின், அவ்வரம்புக்குக் கட்டுப்பட்டுத்தான் எம்மொழியும் இயங்கவேண்டுமேயல்லாது, பேச்சு மொழிக்காக இலக்கண வரம்பில் நெகிழ்வு கூடாது. உடனே, இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் என்று கூறி, இற்றை மக்கள் அன்றுடம் பேசும் பேச்சாகிய இலக்கியத்திற்கு(!) ஏற்றவாறு இலக்கணத்தை(!) மாற்றிக்கொள்வது தவறன்று என்பாருமுளர்; அதற்குப் 'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்ற நன்னூற்பாவும் துணை நிற்பதாகத் தோன்றலாம். ஆயின் பண்டு வகுக்கப்பட்ட இலக்கணத்துள், காலச்சுழற்சியால் மாற்றம் பெறும் ஏதேனும் ஒன்றிரண்டிற்கு மாற்றாக இயல்பாக நுழைவதைத்தான் 'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்னும் கருத்து வலியுறுத்துமேயல்லாது, இலக்கண வரம்பிலாது புகுத்தப்படும் புல்லிய பேச்சுகளையன்று என்பதை உன்னியுணரவேண்டும்.

எனினும், நல்ல தமிழில் பேசும் பேச்சாளர்களோ அறவே இலர் என்று கூறிடல் சாலாது. தமிழ்ப் பற்றுள்ள ஒவ்வொருவரும் நல்ல தமிழ்ப் பேச்சாளர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பதோடு, கொச்சைத் தமிழ்ப் பேச்சாளர்களையும், கொச்சைத் தமிழ் எழுத்தாளர்களையும் புறக்கணித்தல் வேண்டும். பள்ளி இலக்கிய மன்றங்களில் நற்றமிழில் பேசும் பயிற்சி பெறுமாறு மாணவர்களைத் தமிழாசிரியர்கள் பயிற்றிடவேண்டும். இன்றேல், வருங்காலத் தமிழர் குமுகாயம் தற்காலத் தமிழகத்தை மிகவும் மட்டமாக எடைபோடும் இழிநிலை ஏற்பட்டுவிடும். வருமுன்னர்க் காப்பது அருந்தமிழர் கடனன்றோ? தழைக்க தமிழுணர்வு! O

# திருவள்ளுவரின் திருவுள்ளம்

"பிறரை ஏமாற்றுமல் வஞ்சிக்காமல் இந்த உலகத்தில்–பிழைக்க முடியாது. துட்டு வந்து பெட்டியில் விழுமா – திட்டு வந்து பெட்டியில் விழுமா? பழியாவது – கரிசாவது?" என்றெல்லாம் சொல்லிக் கொண்டு சான்றோர்கள் நாணமின்றி வாழமாட்டார்கள் ஒரு குற்றம் அல்லது மாசு தங்களை வந்து அடைகிறது என்றால் – அதற்காக அவர்கள் நொந்து வருந்திச் சாவார்களே யன்றி, பழிவந்தால் வந்து போகட்டும் அது நம்மை என்ன செய்யும்? நம்மிடம் உள்ள பணத்தை என்ன செய்யும்? என்று நாணத்தைத் துறந்து வாழ மாட்டார்கள். இதனை நாலடியார் பாடல் ஒன்று அழகாகச் சொல்கிறது.

"அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் – திங்கள்
மறுவாற்றும் சான்றோர்அஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின் —நாலடியார் 151.

நாணத்தை நாம் உயிரினும் மேலாகப் போற்றி வாழவேண்டும். உயிரை விட நேர்ந்தாலும் நாணத்தை விடக்கூடாது. நாணம் என்னும் பண்பை ஆள்பவர்கள் நாணத்தின் பொருட்டு – அஃதாவது பழிவரும் என்றால் – அதற்கு அஞ்சி – உயிரை விட்டாலும் விடுவார்களே – அன்றி உயிரைக் காப்பாற்றுவதற்காக என்று நாணத்தை விடமாட்டார்கள்.

"யாவர்க்கும் ஆம் உண்ணும் போதுஒரு வாயுறை
யாவர்க்கும் ஆம் பிறர்க் கின்னுரை தானே"

பசி என்று வந்தவர்க்கு பாக்கு அளவு உணவும் - கொடுக்காமல் வாழ்வது கூடாது என்கிறார் பட்டினத்தார்.

"பாக்களவாம் அன்னம் பசித்தோர்க்கு ஈயாமல்"

–இருக்கின்ற கல் நெஞ்சத்தை அவர் கடிந்துரைக்கிறார். எப்போதும் நம்மோடு இருக்கின்ற நம்முடைய நிழல் நமக்கு எப்போதேனும் பயன்படுமா? வெய்யிலுக்குச் சற்று நிழலில் ஒதுங்கியிருக்க விரும்பினால், நம்முடைய நிழல் அதற்கு உதவுமா? நாம் பிறருடைய நிழலில்தான் ஒதுங்க முடியுமே தவிர நம்முடைய நிழலிலேயே நாம் ஒதுங்க முடியாது. நம்மிடம் உள்ள செல்வமும் அப்படிப்பட்டது தான். நமக்கு நம்முடைய செல்வமே சமயத்தில் உதவும் என்று இருக்கக்கூடாது. நம்முடைய நிழல் நமக்கு உதவாமற் போவது போல் நம்முடைய செல்வமும் நமக்கு உதவாமற் போய் விடும். நம்முடைய நிழலில் பிறர்க்கு இடமளித்து உதவி பிறருடைய நிழலில் தான் நாம் ஒதுங்க இடம் பார்க்க வேண்டும். நம்மிடமுள்ள பொருளைப் பிறர்க்குக் கொடுத்து உதவினால்தான் மற்றவர்களிடமுள்ள பொருள் நமக்கு வந்து உதவும். இந்த உண்மையை உணர்ந்து நொய்யைப் பிளந்தாற் போன்று சிறிதளவேனும் ஏழை மக்கட்குக் கொடுத்து உண்ணுங்கள்" என்கிறார் அருணகிரிநாதர்.

"வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவேனும் பகிர்ந்துண்மின் நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறுநிழல் போல்
கையிற் பொருளும் வாராது காணும் கடை வழிக்கே

—கந்தரலங்காரம்

நாம் முயன்று சேர்க்கின்ற பொருள் எல்லாம் எதற்காக என்றால் தக்கவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்குத்தான். நாம் உழைத்துச் சேர்த்த பொருள் நமக்கும் நம்முடைய மனைவி மக்களுக்குமே பயன்பட வேண்டும் என்று இருக்கக்கூடாது. குடும்பத்தில் இருந்து பொருளீட்டிக் காத்து வாழ்வதெல்லாம் - எதற்காக? விருந்தினரைப் போற்றிப் பிறர்க்கு - உதவியான நன்மைகளைச் செய்வதற்குத்தான் என்று திருவள்ளுவர் நமக்குத் தெளிவாகச் சொல்கிறார்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" —குறள் 212.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்யற் பொருட்டு" —குறள் 81.

நாம் உழைத்துச் சேர்க்கின்ற பொருளைப் பிறர்க்குப் - பயன்படச் செலவிட வேண்டும் என்றால், நம்மைப் போலவே பிறரை நினைக்கின்ற மனம் நமக்கு வேண்டும். இந்த உலகிற் பிறந்து வாழும் மக்கள் எல்லாரும் ஒத்த உரிமையுடையவர்கள். நமக்கு இந்த உலகில் வாழ எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு – உரிமை மற்றவர்களுக்கும் இருக்கிறது. நமக்கென்று வாழ நாம் பிறக்கவில்லை. பிறர்க்கென்று – வாழவே நாம் பிறந்திருக்கிறோம். நாம் யாருக்கும் தாழ்ந்தவர் அல்லோம். யாரும் நம்மை விட உயர்ந்தவர் அல்லர். பிறப்பால் அனைவரும் ஒரு நிகரானவரே என்பதை - அறிந்து வாழ்கின்றவன் தான் உயிரோடு வாழும் மாந்தனாவான். எல்லாரையும் தனக்குச் சமமாக எண்ணி எல்லோரும் வாழ வேண்டும் என்று உதவி செய்யாதவன் ஒப்புரவைப் போற்றாதவன் – செத்தவருள் வைத்து எண்ணத் தகுந்தவனே ஒழிய உயிர் வாழ்பவர்களோடு சேர்த்து எண்ணத் தகுந்தவனாக மாட்டான்.

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையார்
செத்தாருள் வைக்கப்படும்" —குறள் 214.

எந்த அளவும் வேற்றுமை பாராட்டாமல் எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி உள்ளத்தில் ஒத்த உரிமைதந்து உதவி வாழ்பவர் யாரோ அவருடைய உள்ளம்தான் இறைவன் தூய அறிவு வடிவாய் நடம்புரிகின்ற இடம் என்கிறார் இராமலிங்க அடிகள்.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்
போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உள்ளந்தான்
சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரிம் இடமென
நான் தெரிந்தேன் அந்த
வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தை
மிக விழைந்த தாலோ! —திருவருட்பா

அத்தகைய மேலோர்களுக்கே ஏவல் செய்திட என்மனம் மிகவும் விரும்பி விழைகிறது என்கிறார்.

அத்தகைய மேலோர்கள் கைம்மாறு கருதாது மற்றவர்களுக்கு உதவி செய்வார்கள். அவ்வாறு - கைம்மாறு கருதாது செய்கின்ற உதவிக்குத்தான் ஒப்புரவு என்று பெயர். இந்த உலகம் தனக்குப் பேருதவியாக உரிய காலத்தில் பெய்து குளிர்விக்கும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கிறது? ஒன்றுமில்லை. என்ன கைம்மாற்றை மழை உலகத்திடம் - எதிர்பார்த்துப் பெய்கிறது? ஒன்றுமில்லை. அது போலத்தான் பிறர்க்கு உதவியாக வாழுவது தம் கடமையென்று அறிந்து செய்கின்ற உதவிகளும் கைம்மாறு வேண்டாதவை. கைம் மாற்றை எதிர்பாராதவை.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு? —குறள் 211.

பிறருடைய குறையைத் தீர்ப்பதே - பிறருடைய துன்பத்தைப் போக்குவதே நோக்கமாகக் கொண்டு உதவுவதுதான் ஒப்புரவாகும். இந்த ஒப்புரவுப் பண்போடுதான் நம்நாட்டில் வாழ்ந்த வள்ளல்கள் தங்களிடமிருந்த பொன்னையும் பொருளையும் வறியவர்களுக்கு வாரி வாரி வழங்கி வந்திருக்கிறார்கள். இந்தப் பிறவியில் பிறர்க்குக் கொடுத்து உதவினால் - அது மறுபிறவியில் வந்து உதவும் என்று எண்ணி அவர்கள் கொடுக்கவில்லை. மறுமையில் தமக்கு நல்லநிலை வேண்டுமென்று கருதி இம்மையில் அவர்கள் - ஈயவில்லை. பிறருடைய வறுமையைப் போக்கி வாழ்விக்க வேண்டும் என்ற நோக்கம் ஒன்றையே - கொண்டு அவர்கள் ஈந்து மகிழ்ந்திருக்கிறார்கள் வையாவிக் கோப் பெரும்பேகன் என்னும் பெரு வள்ளலைப் பற்றிப் பரணர் என்னும் பெரும்புலவர் சொல்கிறார்,

"உடாஅ போரா வாகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணையாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர்வறுமை நோக்கின்று அவன்கை வண்மையே

—புறம் 141

ஆய் அண்டிரன் என்னும் மற்றொரு வள்ளலைப் பற்றிப்பாடும் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் வேறொரு புலவர் சொல்கிறார். "இப்போது நாம் நம்மிடம் உள்ளதைப் பிறர்க்குக் கொடுத்தால் அது பின்னால் நமக்குப் பெருமையைத் தேடித்தரும். இம்மையில் செய்வது மறுமைக்கு ஆகும் என்று எண்ணி அறத்தை விலை கொடுத்து வாங்கும் வணிகன் அல்லன் எங்கள் அரசன். நமக்குமுன் சான்றோர்கள் இப்படிப் பிறர்க்கு ஈந்து, உதவி, வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். அவர்கள் சென்ற அந்த வழியில் நாம் செல்லவேண்டும் என்று அந்த நோக்கத்தோடுதான் அவன் வாரி வழங்குகிறான். அவனுடைய கை வண்மையானது; அந்த ஒப்புரவின் பாற்பட்டதுதான்!" என்கிறார்.

"இம்மைச் செய்ததும் மறுமைக் காம்எனும்
அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே!

—புறம் 134.

பிறர்க்கு ஒன்றைக் கொடுத்து உதவுவதால் மேலுலகத்தில் நமக்கு இடம் ஒதுக்கி வைக்கப்படும் நாம் இறந்த பின் வானுலகம் சென்று வாழலாம என்று எண்ணிப் பிறர்க்குக் கொடுக்கக் கூடாது. பிறர்க்கு ஒன்றை ஈவதானது அவருடைய துன்பத்தை நீக்கும். அவருடைய வறுமையைப் போக்கும். அதனால் அவரும் நம்மைப் போல் இங்கு மகிழ்ந்து வாழ்வார். நாம் நன்றாக வாழ்வதோடு பிறரையும் நன்றாக வாழ வைப்பதுதான் நல்லது என்று அறிந்து உதவவேண்டும். யார் என்ன சொன்னாலும் பிறர்க்குக் கொடுப்பதே நல்லது என்று கொடுக்க வேண்டும். "நீ உன்னிடமுள்ள பொருளை யாருக்காவது ஈந்து உதவினால் உனக்கு மேல் உலகில் இடம் கிடைக்காது. கீழ் உலகில் தான் இடம் கிடைக்கும்" என்று யாராவது சொன்னாலும், "மேல் உலகில் இடமில்லாவிட்டாலும் போகிறது. பிறர் படுகின்ற துன்பத்தை அகற்றுவதே நல்லது" என்று ஈந்து உதவுங்கள் என்றுதான் திருவள்ளுவரும் சொல்கிறார்.

"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று —குறள் 222.

முன்னால் நாம் ஒருவர்க்கு ஓர் உதவியைச் செய்தால் பின்னால் நமக்கு அவரால் இன்ன உதவி கிடைக்கும் என்று கணக்கிட்டுக் கைம்மாறு கருதி உதவுவது ஒப்புரவாகாது. மருந்தாகப் பயன்படு கின்ற மரம் தன்னுடைய காய்களையும் கனிகளையும் தழைகளையும் – மட்டும் கொடுத்து உதவாமல், வேர், பட்டை, பூ முதலான தன் எல்லா உறுப்புகளையும் தந்து தன்னையே அழித்துக் கொண்டு உதவுவது போல் தன்னிடம் சேர்கின்ற செல்வம் முழுமையாகப் பிறர்க்குப் பயன்படுமாறு வாழ்வதுதான் ஒப்புரவாகும்.

''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் —குறள் 217.

இந்த ஒப்புரவாகிய பெருந்தகைமை நம்மிடம் - இருந்தால்தான் நாம் சான்றோராக இயலும்.

நான்காவதாக அமைய வேண்டிய பண்பு - கண்ணோட்டம் என்பதாகும். நம்மைப் போன்ற ஒருவரை அல்லது ஓர் உயிரைக் கண்டவுடன் நம் எண்ணமானது அவரிடம் அல்லது அதனிடம் ஓடிப் பரிவு கொள்வது – இரக்கம் கொள்வது – கண்ணோட்டமாகும். கண்ணோட்டம் என்னும் இந்தப் பண்பைத் திருவள்ளுவர் ஒரு மிகப் பெரிய அழகு - மிகச் சிறந்த அழகு என்று சொல்கிறார். கண்ணுள்ள வர்கள் யாவரும் இந்த அழகைப் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். இந்த அழகைப் பெற்றில்லாத கண் கண் அன்று என்கிறார். இந்த உலகம் நடைபெறுவதே இந்தக் கண்ணோட்டத்தால் தான் என்கிறார்.

''கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு —குறள் 371.

நாம் துன்பப்பட்டாலும் பிறர் துன்பப்படக்கூடாது – என்று நம்மை எண்ணச்செய்வது இந்தக் கண்ணோட்டம் தான். நம்மைப் பிறர் துன்புறுத்தினாலும் நாம் பிறரைத் துன்புறுத்தக் கூடாது என்று நம்மைத்தடுப்பது இந்தக் கண்ணோட்டம் தான். தன்னுயிர் போல் மன்னுயிரை எண்ணிப் போற்றத் தூண்டுவது இந்தக் கண்ணோட்டம் தான். சான்றோர் ஓர் அரிய செல்வமாகக் கருதிப் போற்றுவது இந்தக் கண்ணோட்டமாகிய பண்பைத்தான் — நற்றி ணைப் புலவர் ஒருவர் சொல்கிறார்.

''சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே" —நற் 210.

சான்றோர் பொருட் செல்வத்தைச் செல்வமாக மதிப்பதில்லை. தம்மைச் சேர்ந்தோரின் துன்பத்தைக்கண்டு வருந்தியிரங்கும் பண்பாகிய கண்ணோட்டமாகிய செல்வத்தைத்தான் செல்வமாக மதிக்கிறார்கள்'' என்கிறார்.

ஒரு தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான். தலைவியிடம் சொல்லி விட்டுத்தான் செல்கிறான் பொருளீட்டி வருவதற்காகச் செல்கிறான். சென்றவன் நெடுநாட்களாகியும் திரும்பிவரவில்லை. சென்ற இடத்தில் உடனே திரும்ப முடியாத நிலையில் இருக்கிறான். வீட்டிலோ தலைவி அவன் நினைவாகவே இருந்து வருந்தி நொந்து அழுது கொண்டிருக்கிறாள். அவளால் தலைவனை நினைக்காமலும் இருக்க முடியவில்லை. நினைக்கவும் முடியவில்லை. அவளுடைய காதல் நெஞ்சம் தலைவனைக் காணாமல் படுகின்ற வேதனையோ வானத்தைச் சென்று அடையும் அளவுக்கு உயர்ந்து விட்டது. அந்த நிலையில் அவள் தன் தலைவனைப்பற்றி என்ன கூறுகிறாள் என்பதை குறுந்தொகைப்பாட்டு ஒன்றில் ஔவையார் காட்டுகிறார். ''என் தலைவர் என்னை விட்டுப்போய் இவ்வளவு நாட்களாகியும் திரும்பி வராமல் இருப்பதை நினைத்துப் பார்த்தால் நெஞ்சம் வேகிறது. அதை நினையாமல் இருக்கலாம் என்றால் - அது என்றால் முடிவதாக இல்லை நான் என் தலைவர் பால் கொண்டுள்ள காதலோ வருந்தி வானத்தை அடைந்து படர்வதாக இருக்கின்றது. இப்படி - இங்கே ஒருத்தி வருந்திக் கொண்டிருப்பாளே - என்று எண்ணி இரங்கித் திரும்பி வந்து அருள் செய்கின்ற கண்ணோட்டமாகிய பண்பு என் தலைவரிடம் இருப்பதாகத் தெரியவில்லையே! அவரிடம் சான்றாண்மை என்பது இல்லையோ? அவர் ஒரு சான்றோர் இல்லையோ? என்னவோ? சான்றோர் அல்லாத ஒருவரைப் போய் நான் மணந்து கொண்டு விட்டேனே'' என்கிறாள்.

''உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது
இருப்பின் எம் அளவைத்தன்றே வருந்தி
வான் தோய் வற்றே காமம்
சான்றோர் அல்லர் யாம்மரீஇ யோரே! —குறுந் 102.

எனவே கண்ணோட்டம் இல்லாதவரைச் சான்றோர் என்று சொல்வதற்கில்லை.

—தொடரும்

–மு. மகிழரசன்–

# மாந்தன் நெஞ்சம்!

1 கண்ணுக்குக் கோளாறு வந்திருக்கக் கண்ணுற்றால்
கவன்றழுவோம்; கடிதிற் சென்று
புண்ணுற்றால் அறுவைசெய்வோம்; புதுமருந்தொன் றிட்டே
புரைதவிர்ப்போம்; ஆனால் புன்மை [நாம்
கண்ணுற்றுக் கரந்துழலும் மாந்தர்தம் கரிநெஞ்சிற்
கோளாறு கண்டோம் என்றால்...
திண்ணுற்ற மருத்துவம்தான் என்னென்று தேர்ந்திடுவோம்?
திருத்திடுவோம்? திகைக்கும் நெஞ்சே!

2 விரிக்கின்ற வாய்,நாற்றம் விடுக்கின்ற தென்றாலும்
விரைவாகத் தடுப்போம்; வெற்றே
சிரிக்கின்ற பற்களிலே செறிந்திருக்கும் கறையெனினும்
சீர்செய்வோம்; ஆனால் உள்ளே
அரிக்கின்ற புல்லுணர்வால் அலைக்கின்ற தீநினைவால்
அழிந்துவரும் மாந்த நெஞ்சுள்
இருக்கின்ற பெருநோயை எங்ஙனம்நாம் எடுத்தெறிவோம்?
இரங்கிடும்என் இனிய நெஞ்சே!

3 விளைகின்ற தீங்குளைத்தும் விளைக்கின்ற சொற்களெலாம்
விரைந்துதிர்த்தே எவ்வெவ் வாறும்
வளைகின்ற நாவெனினும் வறுத்தெடுப்போம்; நேர்நீட்டி
வடித்தெடுப்போம்; ஆனால் வஞ்சம்
நெளிகின்ற சூழ்ச்சியிலும் நெடிதோங்கும் இழிவினிலும்
நெகிழ்ந்துநலி மாந்த நெஞ்சம்
தெளிகின்ற மருந்தெங்ஙன் தெரிந்தெடுப்போம்? மற்றெங்ஙன்
தெளித்தழிப்போம்? தவிக்கும் நெஞ்சே!

4 சுளுக்குற்ற கழுத்துக்குச் சிறுகோணல் என்றாலும்
சுளுக்ககற்றித் திருப்பி வைப்போம்;
தளுக்காக அசைத்தசைத்தே தலையாட்டிச் சுழலவிட்டும்
தகுதிசெய்வோம்; ஆனால் வண்ணான்
வெளுக்காமல் அழுக்கேறி விறைத்திருக்கும் ஆடையைப்போல்
வெந்தழியும் மாந்தன், 'கீழ்மைக்(கு)
இளைக்காத தீநெஞ்சின்' இழிநோயை எங்ஙனம்நாம்
இறுதிசெய்வோம்? ஏங்கும் நெஞ்சே!

5 தோளுக்கு மேலுற்ற புண்ணெனினும் தொட்டறுத்துத்
துயர்நீக்கித் தொலைப்போம்; தீம்புண்
காலுக்கே எனிற்சுமப்போம்; கைசுளுக்குற் றாலும்போய்க்
கைகொடுப்போம்; ஆனால் நச்சுக்
கோளுக்கும் மேலாகக் குணங்கெட்டே அலைமோதிக்
கொழுத்தார்க்கும் மாந்த நெஞ்சின்
பாழுற்ற பெரும்பிணியைப் பட்டென்று தீர்ப்பதெங்ஙன்?
பதைப்புற்றுப் பரியும் நெஞ்சே!

6 பிணியொன்று வயிற்றுக்குப் பெரும்பசியே என்றாலும்
பின்வாங்க மாட்டோம்; கூவி
உணவென்னும் மருந்திடுவோம்; உள்ளவரை விருந்திடுவோம்;
உடன்விரைவோம்; ஆனால் ஊறு
துணிந்தென்றும் ஏமாற்றுந் தொழில்பழகும் கயமைப்புண்
தோய்ந்துழலும் மாந்த நெஞ்சின்
பிணியொன்று போயகலப் பிறமருந்துக் கென்செய்வோம்?
பிணிதீர்க்கப் பதைக்கும் நெஞ்சே!

7 முதுகுக்கு வலியென்றால் மெத்தெனவே ஒத்தடமும்
முறையாகக் கொடுப்போம்; கூனல்
பதிவுற்றுக் குனிகின்ற பாழுடலும் நிமிர்ந்திருக்கும்
படிசெய்வோம்; ஆனால் உள்ளே
சிதைவுற்றுக் கெடுநினைவால் சிற்றறிவால் நோயுற்றுச்
சிறுத்திழுக்கும் மாந்த நெஞ்சின்
விதைப்புற்ற கடுநோயை விரட்டுவதற் கென்செய்வோம்?
விடாப்பிடியாய் வருந்தும் நெஞ்சே!

8 கண்போலும் கைபோலும் கால்போலும் மெய்போலும்
புறத்துறுப்பாய்க் கண்ணிற் பட்டால்
புண்ணறிந்தே போயறுவைப் பண்டுவமும் புரிந்திடுவோம்;
புதுமருந்தும் இடுவோம்; ஆனால்
எண்ணிறந்த இறையன்பர் எனும்பெயரில் துவருடைக்குள்
இருந்தொளித் யவர்போல், கூட்டின்
உண்ணிலைத்த உள்ளத்துக் குற்றபுண்ணுக் கென்செய்வோம்?
உள்ளிருந்தும் ஒளியா நெஞ்சே!

9 கண்வழியாய்த் தெரிந்தாலும் கறைபடிந்த மனப்புண்ணைக்
களைந்தெறிவோம்; கணித்துப் பார்த்தும்
உண்மையினை முகக்குறிப்பால் உய்த்தறிவோம்; நகைமொழி
உற்றறிவோம்; நடையொ ழுங்கால் [யால்
திண்மையுடன் தெரிந்துமருந் திடுவோம்;ஆ னால்எண்ணத்
திருவழிந்த நெஞ்சம், கங்குற்
கண்மறைந்த திருடர்போல் கரந்தொளித்துக் கொண்டால்
என்செய்வோம் கவலும் நெஞ்சே! [நாம்

10 மறைவிருந்துட் பகைசெய்யும்; மலர்ந்துபுறம் நகைசெய்யும்;
மதிப்பதுபோல் மிதிக்கும்; தீமை
வெறிமிகுத்துக் கணித்திருக்கும்; வஞ்சனையில் இனித்திருக்
வெளிப்பகட்டு வளர்க்கும்; நல்லை [கும்;
பொறிமறித்துப் புலன்கெடுக்கும்; பொய்,களவு வளம்பெருக்கும்;
பொல்லாத மாந்தன் பெற்ற
குறைமிகுந்தே அழுகலுறும் குள்ளமனப் புண்ணிற்கென்
செய்வோமென் செய்வோம் நெஞ்சே! O

—புலவர் திருமேனி நாகராசன். காரைக்கால்.

# செவிலி

மாந்த வாழ்க்கை அகம் புறமென இரு வகைப்படும். அகமாவது அகத்தே நிகழும் இன்பமாம். புறமாவது புறத்தே நிகழும் செய்கை யாம். அகம், புறம் என்பன ஆகுபெயர். இனி அகமென்பது ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் தம்முள்கூடுகின்ற காலத்துத் தோன்றி ஒருவருக் கொருவர் ''இஃதிப்படிப்பட்டது'' என்று சொல்ல இயலாததாகி யாண்டும் உள்ளத்து உணர்வாலேயே உணர வல்ல தாம். புறமென்பது ஒத்த அன்புடையாரே யன்றி யாவரும் நுகர்ந் துணர்ந்து ''இஃதிப்படிப்பட்டது'' எனப் பிறர்க்கும் விளங்க எடுத்துரைக்க வல்லதாம்.

அகவாழ்க்கையில் பிறப்பு முதலாகத் திருவீருகச் சொலப்பட்ட பத்துப் பண்புகளும் நிறைந்த தலைவனும் தலைவியும் தம்முள் களவொழுக்கங் கொள்வது மரபு. இன்றியமையா அத்தலைவிக்கு உயிர் போல்வாள் தோழியாவாள்; அனைத்துமாய் விளங்குபவள் செவிலி யாம். அச்செவிலியை ஈண்டு அறிவாம்.

செவிலி என்பாள் நற்றாய்க்குத் தோழியாவாள். நற்றாய் என்பது தலைவியை ஈன்ற தாய்க்குப் பெயராம். செவிலி முதியள்; பேரறிவினள்; தலைவிக்கு மறைபொருள் உணர்த்தும் மாண்பினள்; தலைவியின் உயர்த்தோழியை ஈன்ற தாய். இதனை,

¶ "ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவாள் செவிலி யாகும்"

† "தோழி தானே செவிலி மகளே"

என்னும் இலக்கண மூண்மையான் அறியலாம்.

நற்றாய்க்குத் தலைவி பிறந்தாள் என்பது உண்மை. ஆனால், அவளை எடுத்து வளர்த்துச் சீராக்கிய பெருமை செவிலியதாகும். நற்றாயின் கடன் பெறுதலோடு அமையும். செவிலியின் கடன் அதன்மேல் தொடங்கித் தலைவியின் இறுதிக்காலம் வரை இயைபு கொண்டு நிற்கும். பண்டு மக்களை வளர்க்கும் தொழில் செவிலிக்கு உரித்தாம். நற்றாய்க்குத் தொழில் இல்லறத்தை மேலும் முட்டின்றி நடாத்தல்- தலைவியைப் பெற்ற அன்பு ஒருத்திக்கு; அவளை வளர்த்த அன்பு மற்றொருத்திக்கு. ஆதலின் அவ்விருவரும் ஒப்பர். என்னை, நூற்களெல்லாம் நற்றாயையும் செவிலியையும் தாய் என்னும் பொதுச் சொல்லாலேயே அழைப்பதை அறிக.

செவிலி தலைவியிடத்துப் பேரன்பினள்; அவளை யாண்டும் கண்போல் காக்கும் பொறுப்பினள்; அவள் தேவை அறிந்து நிறைவு செய்பவள்; இரவில் தன்னருகர் அவளைப்படுக்க வைத்தும் அவள் பாங்கறிந்தும் ஒழுகுபவள். இனி அச்செவிலி தன் அரும் பெறல் மகளையும் தலைவிக்கு உயிர்த்தோழியாய் அமைப்பாள். இல்லிருந்து தலைவியைத் தான் காக்குமாறு போல, தினைப்புனத்தும் பூம்பொழிலிடத்தும் தலைவி செல்லுங்கால் அவட்குற்ற துணையாய்த் தோழியாந் தன் மகளைப் போக்குவாள். செவிலி, பண்டு நற்றாய்க்குத் தோழியாய் விளங்கி அவள் களவுக்குத் துணைநின்று, அவள் கற்பொழுக்கம் பூண்டு பொற்புறுமக்களை ஈன்றபோது அவரை வளர்க்கும்

¶ தொல்காப்பியம் பொருளதிகாரம் - களவியல் - எண்: ௧௨௨

† தொல்காப்பியம் பொருளதிகாரம் - களவியல் - எண்: ௧௨௩

பொறுப்பையும் மேற்கொள்கிறாள். அன்றியும் தன் மகளையும் தன்னைப் பின்பற்றப் பணிக்கிறாள். இதனால் செவிலியர் எல்லாம் பிறப்பு முதலாக இறப்பு ஈறாகப் பிறர் நலனையே தம் நலனாகக் கொண்டு ஒழுகும் பெயராச் சிறப்பினர் என்பது போதரும்.

இனி வாலைப் பருவம் வந்துற்ற தலைவி பூம் பொழிலில் காளை ஒருவனை ஊழான் எதிர்ப்பட்டுக் காதல் கொள்ள, ஆண்டுப் புணர்ச்சி உண்டாம். தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் நிலைபெறுகின்றனர். பல்வகைக் குறி இடங்களில் பல்வகைக் காலங்களில் அவர் இன்பம் துய்ப்பர். இடையே, இடையீடு ஏற்பட்டுக் கூடுதல் இல்லாமையும் இயல்புமாம். அதுபோது இருவரும் தனித்தனியே நெருமந்து தேய்வதுண்டு. எனினும் தலைவனின் ஆற்றுமையினும் தலைவியின் ஆற்றுமை பெண்ணியல்பான் பெரிதாகுமென்க. இங்ஙனங் காணும் பொழுதினும் காணாப்பொழுது பெரிதாதலின் தலைவி ஆற்றாளாகவே தலைவன் அவளைத் தன் நாட்டுக்கு உடன் கொண்டு போக நினைவான். ஒருநாள் இரவு தலைவி, உடன் போக்கு அல்லது பிறபோக்கு இன்மையின் உடன் போக்குக்கு ஒருப்பட்டு அவன் நாட்டிற்குப் பாலை நிலம் வழியே காலில் கடப்பாள்.

பொழுது புலர்கின்றது. செவிலி தன் பாயலின் பக்கத்தே தலைவியைக் காண்டிலள். உடன் அஞ்சியெழுந்து அவளை இல் முழுத்தும் தேடி இல்லாமை அறிகிறாள்; பின்னும் பகலிலும் இரவிலும் தலைவி பழகும் இடமெல்லாம் தேடியும் அவளைக் காணப் பெற்றிலள். அதுமேல், தன் மகளே தலைவிக்கு உயிர்த் தோழியாதலின் அவள் அறிவதெல்லாம் தோழி அறியுமாதலின் மகளேயென விளித்துப் பக்கத்தே அமர்த்திப்பாங்குடன் வினவுவாள்: வினவவே அவளும் "தலைவனுடன் தலைவி உடன் போயினள் அவன் நாட்டிற்கு" என்னச் செவிலி "தலைவி, தலைவனுடன் ஒரு நாள் நான் போதருவேன் என்னும் குறிப்பைக் காட்டியே நின்றாள்; யானே ஒன்றையும் ஆராய்ந்து அறிந்திலேன்" எனச் சாலக் கவன்றாள். (தஞ்சை வாணன் கோவை; செய்யுளெண்: ௩௨௪)

பின்னர் செவிலி தலைவியைத் தேடிச் செல்கிறாள். பாலை நிலத்தில் அவள் கால் சுவட்டைக் கண்டவளவில், செவிலியின் கண்களில் நீர் பொங்குகின்றது; ஏனெனில், தலைவியின் வண்ணச் சீறடி பாலை

அறிந்திலதாதலின். ஆயம் பிரியாத் தன் மகள் ஆயம் நீங்கிப் பாலை நிலப்பரல் மெல்லடி வருத்தத் தலைவனுடன் போன நிலை கண்டு வருந்திப் பேசுகிறாள்:- "தலைவி, கழியிடத்துக் காவி மலர்களைப் பறித்தும் கடல் அலையின் கண் விளையாடியும் தன்னுடன் பிரிதில் இல்லா ஆயத்தார் தத்தமக்கு உரிய விளையாட்டைப் புரிய இங்கு இருத்தலைப் பொருந்தாது மலைநாட்டில் அப்பாலை நிலத்தில் பரல் தன் அடியைச் சிதைக்கச் சென்றனள்." (குறுந்தொகை; பாடலெண்: ௧௪௪)

தலைவியை உடன் கொண்டு பெயர்ந்த தலைமகன் தன் நாடு புக்கு அவளை வரைந்து கொள்வான். அங்குத் தலைவனும் தலைவியும் கற்பொழுக்கத்தைச் செவ்விதின் ஆற்றிவருவர். அவ்விருவர் இல்வாழ்க்கை அறத்தைச் செவிவழியாக அறிவாள் செவிலி. அவள் மிக்க பேருவகையுறுவாள். அவர்தம் மனை வாழ்க்கை காண அந்நாடு செல்வாள். சென்று, மடப்பாவை அருந்ததியும் நாணிப் புறங் கொடுக்குமாறு கற்பொழுக்கங் காக்கும் உயர் நிலைகண்டு பெருவிதுப் புற்று மீளுவாள். மீண்ட செவிலி, நற்றாயிடம் "நந்தலைவி பூ நாறும் முல்லை நிலத்தின் சிற்றூரில் உள்ளனள்; தலைவனின் தேர் வேந்தன் தொழில் கருதி வேற்றூர் செலினும், சென்ற ஊரில் தங்கிவருதலை அறியாது உடனே வந்துவிடும்" இது செவிலி நற்றாய்க்குத் தலைவியின் மனைவாழ்கை மாண்புரைத்ததாகும் (குறுந்தொகை; பாடலெண்: ௨௪௨)

எனவே, இதுகாறும் கூறியவாற்றான் செவிலியின் வாழ்க்கை ஈக வாழ்க்கை என்பது உண்மையாதல் பெறப்படும். அவள், தன் இளமைக்காலம் முடியுமளவும் பண்டு நற்றாய்க்குற்ற தோழியாய் உதவிப் பின்னர் தன் முதுமைக்காலம் முடியுமளவும் தலைவிக்குத் தாயாய், ஆசானாய், பொறுப்பாளியாய், புரப்பாளியாய் விளக்க முற்றாள். ஆதலின் செவிலி தான் பிறந்தது முதலாகச் சிறப்பதுாஉகப் பிறர்க்குத் தொண்டாற்றுதல் ஒன்றையே குறியாய்க் கொள்கிறாள். தன் வழியில் தன் அரும் பெறல் மகளையும் நடப்பிக்கின்றாள். தமிழ் இலக்கியம் காட்டும் செவிலியர் அனைவரும் ஈகக் குடியினரே. இவ் வகையினராலேயே இவ்வுலகம் உலதாகி வருகிறதென்பது முழுத்தும் பழுதற்ற முத்தமிழ்க் கருத்தாம்.

o



# மேகலை

## பார்ப்பனியம் வென்றுவிட்டது

விழிகளில் நீர்மல்க இந்த மடலை நான் எழுதுகிறேன். ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்த எந்தமிழர் இன்று பேதையராகி ஆரியப் பார்ப்பனரின் அடிவருடிகளாக இருப்பது கண்டு என்னெஞ்சம் அழுகிறது.

பார்ப்பார்க்குத் தமிழர் என்ன தீங்கு செய்தார்?

சமற்கிருதத்திற்குத் தமிழ் புரிந்த இடர் என்ன?

ஒன்று மில்லையே; அப்படி இருக்க இந்த ஆரியப் பார்ப்பனர் ஏன் நம்மையும் நம்மொழியையும் இப்படி வீழ்த்துகிறார்கள்? தமிழ் மொழித்துறையைக் கைப்பற்றியுள்ள பார்ப்பான் செய்யும் கொடுமைகட்கு அளவே இல்லை.

தினமணி, மித்திரன், தினமலர் போலும் பார்ப்பன நாளிதழ்கள் தமிழ்ச் சாகடிப்பை வெற்றியுடன் நடத்தி வருகின்றன. 'கல்கி' 'ஆனந்த விகடன்' போலும் கிழமை இதழ்கள் பார்ப்பனப் பண்டாரங்களைப் போட்டுத் தமிழரை ஏமாற்றுகின்றன.

Hindu, Indian Express போன்ற ஆங்கில ஏடுகள்கூட பார்ப்பனருடையவையே! மேற்கூறியவை எல்லாம் எப்படியாவது தமிழைக் கெடுத்துத் தமிழரை முன்னேறுது தடுக்கவேண்டும் என்று உழைக்கின்றன. வானொலி மூலம் பார்ப்பனர் செய்யும் கேடுகள் ஒன்று இரண்டா? பார்ப்பனச்சேரி மொழியில் உளறுகிறார்கள்; கதைப்புகளை (புராணங்களை) அவிழ்த்து விடுகிறார்கள்; பார்ப்பனர்கட்கே வாய்ப் பளிக்கிறார்கள். இந்தியை எதிர்த்துப் போராடிய மாணவர்படை இப் போது தூங்குகிறதா? மைய அரசின் பிடிப்பில் உள்ள வானொலிப் புரட்டுகளை எதிர்த்துப் போராட தயக்கம் ஏன்?

இன்று தமிழர் எல்லாரும் சேற்றில் கிடக்க வேண்டிய கல்கியை யும் ஆனந்த விகடனையும் விரும்பிப் படிக்கிறார்கள். நினைக்கவே வெட்கமாக் இருக்கிறது. தூய தமிழன் இதைச் செய்வானா?

கல்கியும், ஆனந்த விகடனும் நூலகங்களில் உள்ளன; ஆனால் தென்மொழியைக் காணோம். ஆனந்த விகடனைக் காட்டிலும் நம் தென்மொழி என்ன மட்டமா? நூலகத்துறை அமைச்சர் வாயிலாக நம் தென்மொழி எல்லா நூலகங்களிலும் படிக்கப்படத் தென்மொழி யாளர்கள் முனைய வேண்டும். பார்ப்பனர் நந்தமிழைக் கலப்புமொழி யாக்கி நம் தமிழுணர்வை அழித்து அடிமைகளாக்க முனைகின்றனர். இன்று பார்ப்பனரை நாம் எதிர்க்க வில்லையாயின், விரைவில் நாம் அடிமைகளாவோம்.

இன்று தமிழ் இளைஞரும் மாணவரும் R. S. S., (சனசங்கம்) மக்கள் கழகம் இவற்றில் சேர்ந்து பாடுபடுகிறார்கள். இவை இரண்டும் ஆரியப் பார்ப்பனரின் கட்சிகள். இந்து சமய வெறியை அறியாத, படிக்காத தென்புலத்து வடபுலத்து மக்களிடம் கிளம்பி அதன் வழி யாக ஆட்சிக்கு வரப் பார்ப்பனர் அமைத்துள்ள படிமேடைகள் இவை. நம் தி. மு. க. வுக்கும், பெரியார் கழகத்துக்கும் நேர் எதிரிகள். இவற்றில் நம் தமிழ் இளைஞரைச் சேராது பார்க்க வேண்டியது நம் கடமை. மேலும் இவ்வியக்கங்கட்கு இராசாசி துணையும் அறிவுரை யும் எப்போதும் உண்டு. அரசியலில் பார்ப்பனர்க்கு இராசாசியே மூலவர். இராசாசி நம் கண்முன் பச்சைத் தமிழர் காமராசர் ஆட்சி யைக் கவிழ்க்கக் கண்டோம்; பெரியார் துணை செய்தும் காமராசரை வீழ்ச்சியிலிருந்து தடுக்க முடியவில்லை. தமிழன் ஆட்சியைப் பார்ப்

பான் தமிழனையே கருவியாகக் கொண்டு வீழ்த்தி இருக்கிறான். எனினும் கருவியாக இயங்கிய தமிழன் இன்று விழித்துச் செயல்படுகிறான். அண்ணா பெரியாரைச் சந்தித்த அன்றே இராசாசியின் ஆரிய மூளைக்கு வேட்டு வைக்கப்பட்டது.

ஆயிரந்தான் இருந்தாலும் இன்று அரசாள்பவர் நம் தூயதமிழர். பகுத்தறிவாளர்கள்; ஓரளவு போலிமையும் ஆரவாரமும் உடையவர் என்றாலும் தமிழ்ப்பற்று மிக்கவர்கள். இந்நிலையில் தென்மொழியாளர்கள் நம்மவரைப் பயன்படுத்தித் தமிழ், தமிழர் முன்னேற்றத்திற்கு ஆவன செய்ய வேண்டும். அண்ணாவுக்கு அடிக்கடி மடல்கள் எழுதிப் பார்ப்பனரின் கேடுகளைச், சூழ்ச்சிகளைச் சுட்டிக் காட்ட வேண்டும். தனித்தமிழ் வளர்க்க ஆட்சியாளரைத் தூண்ட வேண்டும்.

தி. மு. க அரசைக் கவிழ்க்கப் பார்ப்பனர் திட்டம் போடலாம். இராசாசி ஏற்கனவே நரி வேலைகளைத் தொடங்கிவிட்டதாகக் கேள்விப்படுகிறோம். 'சத்தியமேவ செயதே' என்பதை மாற்றியது குறித்துப் பார்ப்பனர் அடைந்த கசப்புக்கு அளவில்லை. மேலும் பக்தவத்சலம், அவரின் பின்னோடிகள் ஆரிய முயற்சிக்குத் துணை போகலாம்.

இப்போதுதான் தென்மொழியாளர் மிகவும் விழித்துச் செல்ல வேண்டும். தி. மு. க. அரசைப் பழித்து நாம் பேசின் அது நம் தலையில் நாமே தீ அள்ளிப் போட்டுக் கொள்வதாகும். நம்மவரின் இப்பொழுதைய அரசு கவிழ்க்கப்பட்டால் நாம் தலைதூக்குவது மிகவும் அரிது. நம்மிடையே உள்ள புல்லர்களை நாம் எப்படியாவது திருத்தி விடலாம். அந்தப் புல்லர்களை விலக்க முயன்று, ஆரியனுக்கு இடங் கொடுத்தால் நாமே வீழ்வோம்.

இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் தென்மொழியாளர் தமது அரசியல் கிழமை இதழை விரைவில் தொடங்கி, நம் தமிழர்க்கும் தமிழர் ஆட்சிக்கும் துணை செய்ய வேண்டும் என்பது விளங்கும். அந்த இதழ் மூலம் பார்ப்பனரின் அரசியல் குறுக்கு வேலைகளை மன்றத்திற்குக் கொண்டுவர வேண்டும். 'தென்மொழி' இலக்கியம், அறிவியல் இவற்றில் முனைந்து உழைக்கட்டும். 'தமிழ்ச்சிட்டு' நம் குழந்தைகளை முன்னணிக்கு அழைக்கட்டும்.

அரசியல் கிழமை இதழ் அரசியல், குமுகாயம், பொருளியல் இவற்றில் பாடாற்றட்டும். இவை மூன்றும் தமிழகம் முழுவதும் பரவிவிட்டால் தமிழகத்தின் பொற்காலம் உறுதியாக 1967 தான். இவை மூன்றையும் பரப்ப ஒவ்வொரு தென்மொழி அன்பரும் பாடாற்றுவாரா?

(ஊர் பெயர் இல்லை) —அருண்முகில்.

## தமிழகத் திரைப்படத் துறையின் இழிநிலை

தமிழன் தன்மானத்தோடு வாழ என்ன செய்ய வேண்டும்? நல்ல தமிழில் பேசவும், எழுதவும் கற்றுக் கொண்டால் போதும். தமிழ் நாட்டில் நாம் இன்று காண்பது என்ன? எங்கும் எதிலும் ஒரே 'அவியல்' உருவாக இருப்பதைத்தான் காண்கிறோம். தற்போதைய தமிழகத்திலே நல்ல தமிழிலே பேசவும் எழுதவும் தெரிந்தவர்கள் மிக மிகக் குறைவு. வேறு ஒன்றையும் மேற்கோள் காட்டி எழுத முனையவில்லை. தமிழ்த்திரைப்படத் துறை ஒன்றைப் பற்றி மட்டுமே எழுதுகிறேன்.

தமிழ் நாட்டில், திரைப்படம் எடுப்பவன் தமிழன், அதைப் பார்ப்பவனும் தமிழன். அதிலுள்ள கதை தமிழ். நடிப்பவனும் தமிழன். இப்படி, தமிழன் நடித்துத் தமிழன் எடுத்துத் தமிழன் பார்க்கும் தமிழ்த் திரைப்படத்திற்குத் தமிழில் பெயர் சூட்டக் கூடாதா? மிகப் பெரிய இழுக்கு நமக்கு. தமிழ்த் திரைப்படத்திற்கு ஆங்கிலம் கலந்துதான் பெயர் வைக்க வேண்டுமா? ஆங்கிலச் சொல் கலக்கப்பட்டுத் தமிழ்ப்படத்திற்குப் பெயர் வைத்திருக்கும் படங்கள் பற்றிய விளக்கத்தைத் தொகுத்துத் தந்திருக்கிறேன். உண்மைத் தமிழன் இதைப் பார்த்தால், அவனுக்குக் குருதி கொதிக்க வேண்டும்.

**'மெட்ராஸ் மெயில்', 'மிஸ்' கமலா, 'மிஸ்' சுந்தரி, 'மைனர்' ராஜாமணி, தஞ்சாவூர் 'ரௌடி, 'டேஞ்சர் சிக்னல்' 'டுபான் குயின்' பம்பாய் 'மெயில்', 'மதராஸ் எக்ஸ்பிரஸ்', 'காலேஜ்' குமாரி, 'மிஸ்' மாலினி', 'இன்ஸ்பெக்டர்', 'செக்ரட்டரி', 'டவுன் பஸ்' 'டாக்டர்' சாவித்திரி, 'போர்ட்டர்' கந்தன், 'பிரசிடெண்ட்' பஞ்சாட்சரம், 'போலீஸ்'காரன் மகள், 'சர்வர்' சுந்தரம், 'ஹலோ மிஸ்டர்' ஜமீந்தார், சரசா 'பி. ஏ.', 'மோட்டார்' சுந்தரம் பிள்ளை, மதராஸ் 'டு' பாண்டிச்சேரி.**

பார்த்தீர்களா தமிழ்த் திரைப்படப் பிடிப்பாளர்கள், தங்களின் திரைப் படங்களுக்குப் பெயர் வைத்திருக்கும் முறையை ! ஏன் இந்த நிலை ? இதை மாற்றி அமைத்திட வேண்டாவா ? திரைப்பட உலகில் ஈடுபடும் தமிழர்கள் கவனிப்பார்களா ?

29, இயக்குநர் விடுதி,
சிறுமுகை. கோவை (மா. வ.) —க. கதிரேசன்.

# இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு

தாங்கட்கும், தங்கள் சிறப்பான தொண்டிற்கும் என் நன்றியும் வணக்கத்தையும் பணிவுடன் படைக்கின்றேன். மேலும் தாங்கள் தமிழகத்தில் பல்லாண்டுகள் வாழவும், தனித்தமிழ்த் தொண்டுகள் நாளும் வளர்பிறை போல் வளரவும், நம்மில் புகழும் வாழ்வும் தேடித் தமிழையும் தமிழ் இனத்தையும் மேலும் அடிமைப்படுத்த நாவூறல்கொண்டு திரியும் பலர் திருந்திடவும் – என் போன்ற இளைஞர் களுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்துத் தட்டி எழுப்பிடவும்– தனித் தமிழ் தமிழக அனைத்துத் துறைகளிலும் செழுமையுடன் வளர்ந்து உலகெலாம் பரவிப் பயன்கள் பல பெருகிடவும் – இறைவனை நாளும் வேண்டி நிற்கின்றேன்.

பெருமைக்குரிய பெரியீர் !!

இரண்டாவது உலகத் தமிழ் மா நாடு தமிழகத்தில் சென்னையில் 1968 சனவரி) நடக்கப்போவது பற்றியும் செய்தித் தாள்களில் வெளி வந்துள்ள விளம்பர நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பற்றியும் அறிந்திருப் பீர்கள். இதனால் தனித்தமிழுக்கு உண்மையான நிலையான பயன் உள்ள தொண்டுகளைச் செயல் படுத்தும் முறைகளை ஆய வேண்டும். உள்ளத்திலே கள்ளமும் உதட்டிலே வெல்லமும் கொண்டு உரிமை நாடு, ஒரே இந்தியா, பாரத நாடு, இந்திய ஒருமைப்பாடு என்ற போர் வைகளைப் போர்த்துக் கொண்டு நாடகமாடி வஞ்சித்து, மேலும் மேலும் நம் மொழி, இனம், கலை, பண்பாடு, நாகரீகம், நாட்டு நலம் பேணல், ஒருமைப்பாடு அனைத்தும் பையப்பைய அழிக்க எண்ணங்கள் பல கொண்டு பீடுநடை போட்டு வருகிறார்கள் வடவர்கள்.

மாநாட்டு வாயிலாய் இவர்கட்கு வாய்ப்பூட்டு போட்டுத்தடுத்து நிறுத்தி அறிவு புகட்டும் முறைகள் பற்றியும்; இன்று தமிழர்களிடம் காணும் இனப்பிரிவு, பகைமை உணர்ச்சி, காட்டிக் கொடுக்கும் இழிநிலைகள் நீங்கித் தமிழர்கள் என்ற "ஒருமைப்பாடு" வளரத்தக்க திட்டங்கள் உருவாக்குதல் பற்றியும்; தமிழிலுள்ள வேற்று மொழிச் சொற்களையும், தமிழ் மரபுக்கு ஊறு விளைக்கும் பழக்க வழக்கங்கள், பெயர்கள் முதலியனவற்றையும் களைந்து, நல்ல இலக்கிய நூற்களையும், கலை, நாகரிகம், பண்பாடு, வரலாறு அனைத்தும் பிறமொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடும் முறைகள் பற்றியும்; மாநாட்டில் தமிழ்த் தந்தை திருமிகு. பாவாணர் அவர்களையும், திருமிகு. அப்பாத்துரையார் அவர்களையும் அழைத்துச் சிறப்பான பங்குகொடுப்பது பற்றியும் மற்றும் தமிழகத்தில் உள்ள உண்மைத் தமிழ் அறிஞர்களைக் கொண்ட ஒரு "தமிழ் ஆய்வுக்குழு" பாவாணர் தலைமையின் கீழ் அமைத்தல் பற்றியும், மாநாட்டில் மறைமலையடிகள், திரு. வி. க. போன்றவர்களையும் படிமங்கள் அமைத்தல் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் தமிழக அரசினை உறுதியாக, ஆண்மையோடு முன் வந்து ஆவன செய்யும் வகையில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு மற்றும் இதழ்களிலும் தாங்கள் ஒரு வேண்டுகோள் விடுத்து ஆவன செய்யுமாறு தங்களை மிகவும் பணிவுடன் விரும்பி வேண்டுகிறேன்.

அ. முருகன்,
அன்னதாளகம், அம்மணிமங்கலம் (அஞ்) வழி.
புத்தனும்பட்டி, திருச்சி மாவட்டம்.

---


## தென்மொழி கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள் நாடு | கொழும்பு | வெளி நாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7-25 உருபா | 9 உருபா |
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு. |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

# மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்.

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனுல்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்ருகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

---

பின்வரும் சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

**கவி. முத்தம். 15, ஆவுடையாள் வளைவு முத்தாரம்மன் தெரு. பாளையங்கோட்டை.**

சுருத்து–சுற்றத்தார் நலத்தின்பால் கொண்ட அக்கறை–"என்மகன் சுருத்தோடு என்னைப்பார்க்க வந்தான்" என்பது வழக்கு.

**சீண்டிரம்**–(பலவாறு ஏற்படும்) தொல்லை–சிக்கலான நிலைமைக்கு இழுத்துச் செல்பவரிடம் "உன்னுல் சீண்டிரமாக இருக்கிறது" என்பர்.

வாசிரி, வாய்சிறை, வாய்ப்பிறப்பு–வாயால் திட்டப்படும் திட்டு–'ஏச்சு'க் கேட்காதே என்பதனை "வாசிரி" கேட்காதே என்பர்.

பொழியுதல்–குழிவிழுதல்–ஏனங்கள் கீழே விழுந்து குழிவது.

தும்பு–சேலைத்தலைப்பு–முன்தானை நுனியில் காசு முடிவதைத்"தும்பில் முடிந்திருந்த காசு" என்பர்.

சல்லியம்–சண்டை, வீண்சண்டை

சுச்சுணம்–குறும்புத்தனம்–குழந்தையைப் பார்த்துச் சுச்சுணம் செய்யாதே என்பர்.

அலுவிசம்–புதுமை, வியப்பு–நடக்காத ஒன்று புதுமையாக நடந்தால் "அலுவிசமாக" இருக்கிறதே என்பர்.

குறங்குமட்டை–மட்டையுடன் பனையைப்பிடித்துஇருபிரிவாய் நிற்கும் அடி மட்டை–இரண்டாகக் கிளைத்து நிற்கும் பகுதி.

சில்லாட்டை–மேற்சொன்ன குறங்கு மட்டையைப் பொதிந்து காணப்படும் சல்லடை–துரும்பு கொண்டு பின்னப்பட்டு கண் கண்ணுக ஓட்டைகளைக் கொண்டிருப்பதால் "சல்லடை" என்றும் பின் "சில்லாட்டை" என்றும் வந்திருக்கும்.

குலைஞ்சி–குலையிலுள்ள பனங்காய்கள் அல்லது நுங்குக் காய்களைப் பியத்தெடுத்த பின் மிஞ்சும் குலைத்தண்டு–பனங்குலைஞ்சி தென்னங்குலைஞ்சி என்று கூறுவர்.

சிலாம்பு–செதிள்–மீனின் உடற்பகுதியில் காணப்படுவது.

சிலுப்பட்டை–கன்னமும் அதைச் சேர்ந்த எலும்புப் பகுதியும்–"சிலுப் பட்டையைப் பியத்துப் போடுவேன்" என்று சினந்து பேசுவர்.

அச்சடிபுச்சடி–தலை நிமிர்ந்து நிற்கமுடியாத மிகுந்த களைப்பு.

ஆயாசம்–பசியால் வரும் களைப்பு, பசிமயக்கம்.

புசமுட்டல்–மூச்சுவிட முடியாத புழுக்கல் நிலை.

ஏந்தல், ஏந்து–வசதி–சிறிது பொருள்தந்தால் தற்போது ஏந்தலா யிருக்கும் என்பர்.

பிட்டி–உட்கார ஏதுவாயமைந்த சதைப்பகுதி (குண்டி)

இடுப்பு–இடையைத் தாங்கும் எலும்புப்பகுதி.

கீழ்க்கண்ட சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

மு. திருமேனி, 13, புதுவிடுதி தூயவளவர் கல்லூரி, திருச்சி–2.

தாச்சி–விளையாட்டணித் தலைவன் (Captain).

நாள் நடுகை–முதல் நடுகை.

நிறை நடுகை–இறுதி நடுகை.

நசுக்காலை–கரும்பரைக்கப் பயன்படும் சூழ்ச்சியம் (Crusher).

தும்பு–சூடு அடிக்கும் போது மாடுகளைப் பிணைக்க உதவும் கயிறு.

மாஞன்–சிற்றப்பன்.

நீராணி–பல உழவரின் நிலங்கட்குப் பொதுவாக ஒருவன் நீர் பாய்ச்சுதல்.

நீராணிக்காரன்–நீராணி செய்பவன்.

ஏரிடல்–தமிழ் ஆண்டுப் பிறப்பன்று உழவர் கொழுவால் நிலங்கீறிக் கடவுளை வணங்கல்.

கிடைவெட்டி–திருவிழாவில் ஆட்டை வெட்டும் மாந்தன்.

மறுகால்–கண்வாய் நிரம்பிய பின் நீர் பாயும் ஓடை

பொட்டல்–விளையாட்டிடம், பரந்தவெளி, திடல்.

தட்டி–தென்னை மட்டையாற் செய்யப்படும் பாய்.

அட்டியல்–பெண்டிர் கழுத்தில் அணியும் அணி.

சவுடி–பெண்டிர் காதணி.

பதிக்கம்–பெண்டிர் கழுத்திலணியும் பல் வகைக் கல் பதிக்கப்பட்ட நகை.

கீழ்வரும் சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:
விழிஞை. எழிலரசன், சிற்றூர் சீரமைப்பாளர், கப்பியாம்புலியூர்.

மாத்து-வயலில் வேலை நடக்கும் இடத்தில் ஒரு பகுதி.
மற-களை எடுக்கும் போது விடப்பட்ட கரம்பு பகுதி. (புன்செய்)
மெனை-ஓராள் பகுதி; (களை எடுத்தல் அறுவடை செய்தல் போன்ற வினைகளில்).
கொக்கான்-நாற்று நடுபவர்களின் மெனைகளைக் குறிக்க நடப்படும் தனித்தனி நாற்று.
அரிகடை-நெற்கதிர்களை அறுத்துக் கழனியிலேயே உலர வைத்தல். (இரவு தங்க வைத்தல்)
காம்பு-களைக்கட்டின் இரும்புத் தகட்டை இணைக்கும் தடி.
கோட்டுக் கோல்-களை எடுக்க ஒவ்வோர் ஆளுக்கும் மெனை பிரிக்கப் பயன்படும் கோல். (கோடு அடிக்கும் கோல்)
சீய்ச்சிப் பார்த்தல்-மண்ணைத் தள்ளி அலசிப் பார்த்தல்.
சில்லாக் கோல்-விலங்குகளைக் குத்திக் கொல்லப் பயன்படும் ஈட்டி போன்ற கழி.

கீழ்வரும் சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:
தலைமையாசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, மொசட்டணம்.
சாவக்காட்டுப்பாளையம் (அஞ்) நம்பியூர் (வழி) கோபி வட்டம்.

இண்டன்-கஞ்சன்
ஒடைப்பிடித்தல்-கசியடித்தல்-ஆண்மையிழக்கச் செய்தல்.
கப்பி-மாவு இடித்துச் சலித்தது போக எஞ்சிய குறுநொய்.
கதுமை-கூர்மை.
கதம்பை மஞ்சி-தேங்காய் மட்டையின் நார்.
சிறகு-உழுத நிலத்தில் வாய்க்காலில் இணைந்து அமைந்துள்ள பாத்திகளின் தொகுப்பு.
சிலுவாணம்-சில்லறை நாணயங்கள்.
சுங்குடி-சிக்கனம்.
சுப்பை-விறகுக்குச்சி.
தும்பி-நீர் இறைக்கும் சாலுடன் இணைந்துள்ள வால்பறி.
பண்டம்-ஆடு மாடுகள்.
பதனம்-பாதுகாப்பு.
பறி-நீர் இறைக்க ஆகும் சால்.
முட்டுதல்-தைத்தல்.
வாட்டுதல்-தோலிலிருந்து கயிருக் அறுத்து எடுத்தல். O

தமிழ்த் தொண்டையும், இடையரு உழைப்பையும், மெய்யன்பையும், உலக ஈடுபாட்டையும் உள்ளுந்தோறும் எனதுள்ளம் தங்களையே நாடு கிறது. தங்களது 'தென்மொழி'யையும், 'தமிழ்ச்சிட்டு'வையும் பயில் வோர் தொகை தமிழ் நாட்டில் குறைந்த எண்ணிக்கையரேயாயினும், அத்தனைப் பெயரும் அறிவான்மிக்க பெரியோரே! பொறுக்கி யெடுத்த மணித்திரள்களே! அவர்கள்தாம் நம் அன்னைத் தமிழின் மெய்யன்பர் கள்! தங்களின் கொள்கைக்கும், முயற்சிக்கும் அவர்கள்தாம் உறு துணையாக நிற்பவர்கள். ஏனைய 'பொழுது போக்கிற்கு' என நடத்து கின்ற பயனற்ற ஏடுகளும் இதழ்களும் புற்றீசல் போல் எத்தனைதாம் கிளம்பி உலவி வரினும், அதை வாங்கிப் படிப்போர் தொகை மிகுந்து வரினும், அவை அத்தனையும், அவர்கள் அனைவரும், எழுத்தில் உரு வில் தமிழே– தமிழரே என்றாலும் தூய தமிழாகாது; உண்மைத் தமிழன்பராகார்! தமிழ் மரபின் வழி வழி வந்தவருமாகார்!

எனவே எம்மைப் போன்ற உண்மைத் தமிழன்பர்கள் உள்ளமட் டும் தங்களின் முயற்சியும் உழைப்பும் வீணாகா! தங்களின் 'தென் மொழி'யும், 'தமிழ்ச்சிட்டு'ம் ஆயிரமாயிரம் தமிழ்க் காப்புத் தம்பிகளை உருவாக்கும் படைப்பயிற்சியகம் போன்றது! தங்களது ஒவ்வோர் எழுத்தும் கொல்லன் உலையில் வடித்தெடுக்கும் கூர்வாள் போன்றது! எம்மைப் போன்றோர் தங்களது 'தமிழ்க்காப்புப்படை'யில் மறவனாக சேரவிருக்கும் வரை தாங்கள் ஐயுறவோ, கவலை கொள்ளவோ, கலக்க முறவோ வேண்டா! தமிழன்னை தங்களது முயற்சிக்கு 'மடிதற்றுத் தான் முந்தி' என்றும் துணை நிற்பாள்!

–தி. கு. சண்முகம், அபிசேகக் கட்டளை தெரு, திருத்துறைப்பூண்டி

O தென்மொழியின் கடக(ஆடி)த் திங்கள் இதழை நான் காலம் கடந்து காணும் பேறு பெற்றேன். ஆசிரியவுரை கண்டேன். பேரா யக் கட்சியினரில் சிலர் வடவருக்கே வால் பிடித்தார் என்பதும் உண்மை. ஆனால் பெரியவர் சிலரை அவ்வரிசையிலே சேர்க்கலா காது. அத்துடன் தி. மு. க வினருக்குத்தான் தமிழின் மீது பற் றுண்டு என்பது போல் உங்கள் உரை அமைந்து வருகின்றது. பக்தவத்சலமும் அவரைச் சார்ந்த சில ''ஈசல்''களையும் தவிர வேறு எவரும் தமிழுக்குப் பகையாய் இருந்ததில்லை.

அண்ணாவை ஒரேயடியாக உயரத்துக்கு கொண்டுபோய் வைத்து இருக்கின்றீர்கள். இது தமிழக அரசுக்குத் தீனி போடுவது போன்று உளது. தென்மொழி ஏடு ஏற்பட்டிருக்கின்ற அரசுக்குத் துணைபோக வேண்டா. ஆசிரியர், தஞ்சை மாவட்ட மாநாட்டையும் மறந்துவிட வேண்டா. தமிழுக்கு இவர்கள்தாம் தலைவர்கள்; இவர்கள் பேசு வதுதான் தமிழ் என்கிற எண்ணம் இன்னும் தமிழகத்தை விட்டு அகன்ற பாடில்லை.

''கண்களைக் குருடாக்கும்–காதைச் செவிடாக்கும்–கருத்தைப் பறித் தழிக்கும்'' துறை திரைப்படத்துறை; அந்தத் துறை ''துரை''களுக் குத் தான் சிறந்ததே ஒழிய ''துரைமாணிக்க''த்திற்கு நல்லதன்று. ஏனெனில் படமெடுக்கச் சென்று பிணமாகத் திரும்பிய பாவேந்தரை அவர் அறிவார். தென்மொழியின் பணி தொடர்ந்து வளரட்டும்–தமி ழன் வாழ்வை வளமாக்கட்டும். ஆனால், தமிழால் வாழ்ந்தோரையும், வாழ்வோரையும் தமிழுக்காக வாழ்ந்தோராகத் தென்மொழி மாற்றி, மாறி விடவேண்டா. பெண்ணையூரன், பெ கொ. குறிச்சி, திருச்சி.

 பதிவு எண் எம் : 7211.

**குறைந்த படிகளே கைவயம் உள்ளன.**

- அரிய, இனிய தனித்தமிழ்க் களஞ்சியம் !
- அறிவியல் தொகுப்பு !

# தென்மொழித் தொகுப்பு

**சுவடி. 4**

- அழகிய கட்டடம்.

ஒவ்வொன்றும் பதிவஞ்சல் செலவுடன்

**விலை உருபா : 12.**

- தேவைக்கு முன்னதாகவே எழுதுங்கள்.

**தென்மொழி**

கடலூர்-1.

தென்மொழியின் அச்சகம், கடலூர்-1